


ஏ.வி.சி.கல்லூரி மாணவர் இதழ்

அறிந்து பரப்பி ஆக்கம் செய்குவோம்



செப்டம்பர் 2006

நன்கொடை ரூ. 5/-

# APPOLLO
## NURSING COLLEGE

(Affiliated to **BSS** Promoted by Govt. of India)

**உடனடி வேலை வாய்ப்பு**
**10 th PASS**

**பெண்கள் மட்டும்**

**நர்சிங் பயிற்சி**

# DNA

**Ph : 240146 / 240147**

*Contact:*

**Sree Radha Krishnaa Educational Trust**
**No. 14, Kamarajar Salai,**
**Opp. Gomathi Theater,**
**Mayiladuthurai - 609 001.**





தஞ்சை,நாகை,திருவாரூர் மாவட்டங்களின்

**No.1**

# டிஜி மீடியா

## டிஜிட்டல் பிரிண்டர்ஸ்

விசாலம் வணிக வளாகம்,
பஸ் ஸ்டாண்ட் பின்புறம், மயிலாடுதுறை.
போன் : 04364-222261
செல் : 98437 90043,93646 20550

- அரசியல் விளம்பரங்கள்
- திருமண வாழ்த்துக்கள்
- சினிமா விளம்பரங்கள்
- டிஜிட்டல் போட்டோ-வீடியோ
- போட்டோ லேமினேசன்
- விசிட்டிங் கார்டுகள்
- பழைய கறுப்பு-வெள்ளை படங்களை கலராக்குதல்
- டிஜிட்டல் ஆல்பம்

இவை அனைத்தும் உடனுக்குடன் ஒரே இடத்தில் . . .

# ALPHA COMPUTERS

STG

**Authorised Training Center of STG**

இந்திய அரசு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்
(ESTC A GOVT OF INDIA ORGN - A UNDP PROJECT
MINISTRY OF SSI, GOVT OF INDIA)

**ISO 9001 CERTIFIED**

+Education +Software Development +Sales & Service

DOT NET, J2EE, C, C++, TALLY - MULTIMEDIA HARDWARE &
CCNA MCSE NETWORKING

---

## தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம்

(தமிழ்நாடு அரசால் நிறுவப்பட்டது)
U.G.C. AICTE. GOVT. OF INDIA
இவைகளால் அங்கீகரிக்கப்பட்டது.

@

| COURSE OFFERED | |
|---|---|
| All M.Phil., Courses | U.G. 1200/- only per year |
| All P.G. Courses | P.G. 1500/- only per year |
| All U.G. Courses | M.Phil., 6000/- |
| M.B.A., M.C.A., | M.B.A. 7500/- |
| M.C.A., (L.E.) | |
| (B.Sc., & B.C.A.) | B.Ed., |

சிறப்பு அம்சங்கள்

மாணவர் சேர்க்கை, பயிற்சி வகுப்புகள், செய்முறைத் தேர்வு பல்கலைக்கழகப் பொதுத் தேர்வு - இவை அனைத்தும் மயிலாடுதுறையிலேயே நடைபெறும்.

30/4 A, 3rd Floor, Deen Plaza, State Bank Road, Mayiladuthurai.
Ph: 224256, Cell : 9443093523, 9841643382







# PSS கம்ப்யூட்டரின்

## முடிவில்லா கொண்டாட்டம்

எத்தனை விதமான கம்ப்யூட்டர்கள்!
மேம்பட்ட சர்வீஸ் வசதியுடன்
அத்தனையும் அடக்க விலைக்கே!!!

முழு மதிப்புமிக்க

**HCL / STORE**



கம்ப்யூட்டர்கள், ஸ்டாக்,
அக்கவுண்ட்ஸ் & பில்லிங்
மென்பொருள், (தமிழிலும் சாப்ட்வேர்
வசதிகள்)
சோலார் வாட்டர் ஹீட்டர்கள்
எலக்ட்ரானிக் ஸ்கேல்
நோக்கியா, சாம்சங் செல் போன்கள்

மயிலாடுதுறையின் மிகச்சிறந்த
ஒரே
கம்ப்யூட்டர் சேவையாளர்கள் . ..

# PSS கம்ப்யூட்டர் ஷோரூம் A/C

தீன் IT பிளாசா, ஸ்டேட் பாங்க் அருகில்,
மயிலாடுதுறை - 1.
☎ : 223121, 221543
: 98429 - 99800, 94422 - 23121

World No : 1

# APTECH

(We *Change* Lives)

Quality Education

**75% Offer for all Courses**

## SHORT TERM COURSE

- MS -OFFICE
- C, C++, UNIX
- VB & SQL SERVER
- TOTAL.NET
  (VB. NET ASP .NET & ADO.NET )
- DTP (Pagemaker, Coreldraw, Photoshop)
- TALLY IES 8.1
- HARDWARE & NETWORKING
- FLASH & 3D MAX

## CARRIER COURSES

DCA - 6 months

PGDCA - 1 Year

HDSE - 1 Year

Contact:

**Aptech Computer Education**

1st Floor, Deen Plaza, Mayiladuthurai.

☎ :240788







8 கொண்டைக் கரையிலிருந்து வேதாரண்யம் வரை...

31 அரசியல் என்ற சொல் பொன்மொழியாக மாறிடும்...

39 ஊனம் உடலளவில் அல்ல மனத்தளவில் தான்...

45 தேர்தல்.. தேர்தல்... தேர்தல்...

97 திருவள்ளுவருக்கும் கம்பருக்கும் கவிதைப் போட்டி..

## மயில் இறகே...

## உள்ளே...

ஏவிசி

இளந்தூது
தூது - IX
செய்தி - 1

# விலைக்கு வாங்குவது தடைபடுமா . . ?

இப்போது தான் சட்டமன்றத் தேர்தல் முடிந்தது போல் இருந்தது. மறுபடியும் ஊள்ளாட்சித் தேர்தல் களம் சூடுபிடிக்க ஆரம்பித்து விட்டன. இத்தேர்தலில் ஜனநாயகக் கடமைக் கொண்ட வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதில் சற்றுக் கவனம் தேவை. ஏனென்றால் அவர்களை நம்பி 5 ஆண்டுகள் இருக்கின்றன. 5 ஆண்டுகளில் நன்மைகள் கிடைக்கும் என்ற நம்பிக்கையில் மக்களும் இருக்கின்றனர். ஆகவே தான் கவனமாகச் செயல்படுங்கள். ஒரு லட்சத்து 31,000 பதவிகள் உள்ள நிலையில் இரண்டுக் கட்டங்களாகத் தேர்தலை நடத்த தேர்தல் ஆணையம் முனைந்துள்ளது.

ஆகவே இந்த அனைத்துப் பதவிகளும் நிரப்பப்படுமா? வாக்காளர்களை விலைக்கு வாங்குவது தடைபடுமா? நூறு சதவிகித வாக்குகள் எப்போது தான் பதிவாகும். சுவரொட்டிகள் இல்லாத சுவர்கள் தென்படுமா? படித்தவர் படிக்காதவர் என்ற பாகுபாடின்றி வரிசையில் நின்றுத் தனது வாக்குரிமையை நிறைவேற்றுவார்களா? பொது மக்களுக்கு இடையூறாக வைக்கப்படும் பேனர்கள் அகற்றப்படுமா? மொத்தத்தில் தேர்தல் களத்தில் அமைதி நிலவுமா? என்பது அனைவரின் எதிர்பார்ப்புகளே. . . நிறைவேறுமா. . .?

ஆசிரியர்







# அன்புநிறைந்த வாசகர்களுக்கு . . .

இதழ்

இனிய வணக்கங்கள் . . .

பாலைவனச் சோலையாய் கவித்தாகம் தீர்க்கும் நம் இளந்தூது 17 ஆண்டுகளாய்ச் சிறகடித்துப் பறந்து, 18 ஆம் ஆண்டில் தடம்பதித்துள்ளது. இத்தருணத்தில் தங்கள் ஏவுகணை போன்ற படைப்புகளை அயராது ஏவிக்கொண்டிருக்கும் படைப்பாளர்களையும், அறிவின் இருப்பிடமாகிய வாசகர்களையும், விளம்பரதாரர்களையும் வாழ்த்தி மகிழ்கின்றோம்.

வாழ்க்கையில் வளமைச் சேர்க்கவும், வளமான கல்வியினைப் பெறவும் வந்துள்ள எம் கல்லூரியின் முதலாமாண்டுச் செல்வங்களையும் இனிதே வரவேற்கின்றோம்.

இளந்தூதுவை மாணவர்களிடையில் இளமையுடனும், உயிருடனும், உலாவச் செய்த எங்களின் முதல் ஆசிரியர் திரு. **ஏ.இசட்.இராதாகிருட்டிணன்** அவர்களையும், எழில்மிகு கல்லூரியின் ஏற்றமிகு முதல்வராம் **முனைவர். மு.வரதராசன்** அவர்களையும், தங்கள் உள்ளத்தில் இளந்தூதுவிற்குச் சிறப்பான இடம் கொடுத்துச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் ஆட்சிக்குழுவினரையும், சீர்மிகு பேராசிரியர்கள் அனைவரையும் வாழ்த்தி வணங்கி மகிழ்கின்றோம்.

பதினேழு ஆண்டுகளாய் எங்களுக்கு முன்னோடிகளாய் அமைந்த அனைத்து இளந்தூது குடும்ப உறுப்பினர்களை பேராதரவோடு எங்கள் பணியினைச் செம்மையாகத் தொடங்குகின்றோம்.

புதுப்புது பொலிவுடன், புதுப்புது சிந்தனையுடன் புதுப்புது படைப்புகளுடன் உங்கள் உள்ளத்தில் அரியாசனம் ஏற, [illegible] தூதுவாய்ப் பவனி வரப்போகின்றோம்.

இதோ உங்கள் முன். . . .

அதிக தரம்! மிகுந்த சுவை!! குறைந்த விலை!!!

**ஹோட்டல் V.V.V.V.V.**

(ஏ.வி.சி. கல்லூரி எதிரில்)
மன்னம்பந்தல், மயிலாடுதுறை.

**VARSHINI XEROX**
**STD & FAX**

(ஏ.வி.சி. கல்லூரி எதிரில்)
மன்னம்பந்தல், மயிலாடுதுறை.

**V.V.V.V.V. INTERNET BROWSING CENTER**

- DTP Work
- Project Work
- Lamination
- Binding
- Laser Printing

Laser Printout Rs. 2 /- Only

**V.V.V.V.V. XEROX, STD & PCO**

Back & Back Book Work 38 Paise Only

வடகரை ரோடு, மன்னம்பந்தல்.

அதிகத்தரம், குறைந்த விலை, அதிக வாடிக்கையாளர்கள்
இதுவே எங்களின் குறிக்கோள்

தங்களின் ஆதரவுடன் எங்களது வளர்ச்சிப் பாதையில் மற்றும் ஒரு ஹோட்டல்

**A.V.C.C. கேண்டீன்**

மன்னம்பந்தல் - 609 305.







## புறப்படுங்கள் புயலென

*குளிர் காற்றில் குருதி நாற்றம்*
*இது யார் செய்த குற்றம்?*
*நடுமலையில் எரிமலையாய் - மனிதர்கள்*
*தெளிக்கிறது வண்ணப்பூச்சுகளாய்க்*
*குருதி தெறிக்கிறது திசைக்கொன்றாய்*
*அங்கங்கள் சரிதான்*
*குளிர் காற்றில் குருதி நாற்றம்*

*கலங்கிய நிலையில்*
*கண்விழித்துப் பார்த்தால்*
*சகதிகளாய் வருகிறார்கள் - அகதிகள்*
*அகதியாய் வந்த குழந்தை - அனாதையாம்*
*கால்போன குழந்தைக்குக் கால்வேண்டி*
*முறையிடச் சென்றிருக்கிறார்களாம் - இறைவனிடம்*
*அவனின் பெற்றோர் குண்டடிப்பட்டு*
*வளமையைச் சுருட்ட மட்டும்*
*மாதம் நான்கு மாநாடு*
*வன்மையாய்ப் பேச மட்டும் தமிழ்மொழி*
*உண்டு உன் வார்த்தைக்கு வலிமை*
*எங்கே அது தேடுகிறேன் நானும்*
*இரவில் சூரியனைத் தேடுவது போல*
*உறைக்குள் வாளாய் அங்கே நம் தமிழன்*
*அந்த வாளை உருவ*
*வீரம் இல்லையா?*
*இல்லை - வீரர்களே இல்லையா?*
*புறப்படுங்கள் புயலென!*
*அமைதியான தீர்வு வேண்டி . . .*

**க.சௌந்தரபாண்டியன்**
இளம் வேதியல் (நிறை)

# லியோ டிஜிட்டல் ஸ்டுடியோ

## வீடியோ & போட்டோ லேமினேஷன்

★Rented Cameras ★Albums, ★Cassetes★Rolls
★Cell and ★All Photo Goods Available here.

**Jc. S. மோகன்தாஸ்**
லியோ டிஜிட்டல் ஸ்டுடியோ,
No.1, எ.ஆர்.நஜீம் காம்ப்ளக்ஸ்,
டவுன் எக்ஸ்டன்சன்,
மயிலாடுதுறை - 1. ☎: (04364) 227007
Cell : 9443395562

**அனைவரையும் அன்புடன் வரவேற்கிறது**





❖ மறைந்தும் உங்கள் மனதில் வாழும் உங்கள் உறவினர்களின் கருப்பு/வெள்ளை புகைப்படம் தனியாகவோ அல்லது குழுவில் இருப்பதாக இருந்தாலோ குறிப்பிட்ட படத்தை தனியே எடுத்து அழகிய பின்னணியுடன் வண்ணப்புகைப்படமாக்கி பெரிதாக்கி அமைத்துக் கொள்ளலாம்.

❖ வீடியோ கேசட்டில் உள்ள உங்கள் திருமணம் போன்ற ஒளிப்பதிவுகளை பாதுகாக்க அவற்றை VCD மற்றும் DVD யாக மாற்றி வழங்குகிறோம்.






# கனவு மெய்ப்பட...

இளைஞனே!
என் இளைஞனே!
இந்தியாவின் இறங்கு முகம் கண்டும்
பாரா முகமாய்ப் பகல்கனவு காணும்
கருப்புச் சூரியனே!
காலச்சக்கரம் சுற்றுவதற்குள்
உன் கனவுச் சக்கரம்
விண்ணேறி பின் வீழ்கிறதே!
இராஷ்டிரபதி பவனும் ராமேஸ்வரமும் சீர்பெற்று
இமயம் ஏறக் காரணம் உழைப்பு என்று
உறுதி கூறும்... நீ எத்தனைக் காலம்தான்
காதலுக்கும் மோதலுக்கும் தூது செல்வாய்?
திருவிழாக் கூட்டத்தில் தொலைந்துவிட்ட
குழந்தையாய் எதிர்காலம் பற்றி எள்ளளவும்
சிந்திக்காமல் சந்துக்களில் சிந்துப்பாடிச்
சிறகொடிந்து வாழும்
என் சீரிய இளைஞனே!
அதிர்ஷ்டம் வரும் என்று
அலுத்துப்போவதைவிட
உழைத்தே தேய்ந்து போகலாம் நீ
இனியாவது உன் விட்டில்பூச்சி
வாழ்விற்கு விடைகொடுத்து விடியலைத் தேடு!
உறுதியெடுத்து விட்டால்
குருதி கொடுத்தாவது வெற்றிகாண்!
மீண்டும் சொல்கிறேன்
காலதேவதையின் கண்கெடுப்பில்
உடைந்து போகாத கற்சிலையாய்க் காவியம் படை!
என்னைப் பொறுத்தவரை அடிபணிந்து வாழ்வதைவிட
அடிபட்டு வாழலாம்...!

☎ : 242950
Cell : 9842057690

# NATIONAL TUTION CENTRE

19, New Colony,
Chinna Kannara Street,
Mayiladuthurai.

*Best Coaching, Efficient Teaching*

*Accountancy Tution for*

**+1, +2, B.Com., B.B.A., M.Com., MCA**

**B.Sc.,** (Maths Allied Accountancy)

**B.Com.,** ( Business mathematics & Statistics)

***Contact:***

**Jc. HGF. B. MOHAN** M.Com., B.Ed., M.Phil.
P.G. Vocational Teacher,
Govt.Girls.Hr.Sec. School, Mayiladuthurai.

**Jc. HGF. V. KUMAR** M.Com.,D.cop.
P.G. Vocational Teacher, Ramakrishna H.S.School,
Kothandapuram.







## ஆறுதல்

வறுமையில் வாடி
பசி உயிரைக் குடிக்கும் வேளையில்
ஆறுதலுக்காய் எழுதியிருப்பானோ. . .
'செவிக்கு உணவு இல்லாத போது
சிறிது வயிற்றுக்கும் ஈயப்படும்'.

## வறுமை



நான் போதைக்கு
அடிமையானவன் அல்லன்
நோயாளியும் அல்லன்
இருப்பினும் குத்திக் கொண்டேன்
ஊசியை . . .
கிழிந்துபோன என் சட்டையைத்
தைக்கையில். . .

**இராக.விமல்குமார்**
இளம் வணிகம் (நிறை)

## அம்மா



நான் நனையாமல் குடைபிடித்து நடக்க
நீயோ நனைந்து கொண்டே வாழ்க்கையை
நகர்த்தினாய் – வயல்காட்டில் . . .
நான் பேனா பிடித்து எழுதுவதற்கு
நீ களைக் கட்டு பிடித்து
உன் கைகள் காய்த்து போனது . . .
நான் கல்லூரியில் புத்தகம் சுமக்க
நீ மாட்டுக்கொட்டகையில் சாணம் சுமந்தாய்
அன்று நீ நினைக்கவில்லை
என்னிடம் எந்த எதிர்பார்ப்பையும்
ஆனால் நானோ இன்று
உன்னை அழைத்துச்செல்கிறேன்
முதியோர் இல்லத்திற்கு
இனிமேலாவது என் மனைவியிடமிருந்து
உனக்கு நிம்மதி கிடைத்தவிடும் என்ற
எதிர்பார்ப்போடு

**ம.அருள்பிரதாப்**
இளம் வரலாறு (இடை)

# தூதுவின் தூது

"ஆயிரம் ஆனாலும் மாயூரம் ஆகாது" என்பது பழமொழி. எழில் மிகுந்த கோயில்கள், ஏற்றமிகுந்த பெரியோர்கள் என இதன் பெருமைகளைச் சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால், மண்ணின் மைந்தர்கள் சிலர் பண்ணும் வேலைகள் மயிலாடுதுறை மக்களை கலக்கமடையச் செய்துள்ளது.

மயிலை மண்ணின் பிரச்சனைகளை ஆராய்ந்து அறியும்போது மிகவும் வேதனையாகவும், வேடிக்கையாகவும் உள்ளன. மயிலாடுதுறை பாதாளச் சாக்கடைப்பணி 2003 - ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 42 கோடி மதிப்பீட்டில் தொடங்கப்பட்டுத் தற்போது 3 ஆண்டுகளாகின்றன. இத்திட்டத்திற்கு மத்திய அரசு சார்பில் 20 கோடியும், மாநில அரசின் சார்பாக 15 கோடியும் மயிலாடுதுறை நகராட்சி சார்பில் 7 கோடியும் பங்களிப்புத் தொகை நிர்ணயிக்கப்பட்டது. கோடிகள் இங்கு பல புரண்டாலும், தெருக் கோடியில் உள்ள மக்களுக்கோ எதுவும் புரியவில்லை. எங்கு பார்த்தாலும் வழி நெடுகே குழிகள், வழுக்கி விழுந்தாலும் தூக்கி விடுவதற்கு ஆள் இல்லை.

அடுத்ததாக நம்முடைய பேருந்து நிலையம். முகப்புத் தோற்றத்தில் காமராஜர் பெயர் மட்டும் பதித்துள்ளது. ஆனால், அவர் காட்டிய வழி இங்கு இல்லை. உயிரை எடுக்கும் வேகத்தில் பேருந்துகள் பேருந்து நிலையத்திலா போட்டிகள். சட்டென்ற வேகம் அலறியடித்து ஓடும் மக்கள். இந்நிலை தொடர்ந்தால் நிச்சயம் ஆபத்து தான். நகர எல்லை வேகம் இவ்வளவு தான் என்ற அறிக்கைகளை எத்தனைப் பேருந்து ஓட்டுநர்கள் பின்பற்றுகின்றனர்?





அடுத்தபடியாக 7 கோடியில் புதிய பிரமாண்டமான பேருந்து நிலையம் அமைக்க முந்தைய அரசு அடிக்கல் நாட்டியதாகக் கேள்வி. அதன் நிலமை இன்னும் முழுமையாகத் தெரியவில்லை. பலப் பிரச்சனைகள் எழுந்து கொண்டே இருக்கும் நிலையில் ஆச்சர்யக் குறி மட்டுமே விஞ்சுகிறது. மயிலாடுதுறை மக்களின் துயரத்தைப் போக்க பேருந்து நிலையம் அவசியம். அரசு உடனே நிறைவேற்றும் என்று நம்புவோம்.

இது ஒரு புறம் இருக்க இந்தப் பகுதி மக்கள் மாவட்ட தலைநகருக்குச் செல்ல அடுத்த மாவட்டமான திருவாரூர் வழியாகவோ யூனியன் பிரதேசப் பகுதியான காரைக்கால் வழியாகவோ செல்ல வேண்டிய நிலை. மயிலாடுதுறை தனி மாவட்டமாகப் பேச்சு வார்த்தை மட்டுமே நடைபெற்று வருவதாக கேள்வி. வடக்கே கொள்ளிடக் கரையிலிருந்து தெற்கே வேதாரண்யம் போன்ற ஊர்களிலிருந்து படித்த இளைஞர்கள் மாவட்டத் தலைநகரில் பல சந்துகளின் இடைவெளியில் அமைந்துள்ள நம் வேலைவாய்ப்பு அலுவலகம்.

கால் கடுக்க நின்று பரிதவித்துச் செல்லும் இளைஞர்கள் நிற்கக்கூட வசதியில்லை. இந்நிலை நம்முடைய மாவட்டத் தலைநகருக்கா வேண்டும். . ? சிக்னல்கள் இல்லாததால் சீரழியும் போக்குவரத்து. மயிலாடுதுறையில் இருந்த அத்தனை சிக்னல்களும் என்ன தான் ஆச்சோ? தெரியவில்லை.

"புகழிடமாம் புகார்" என்று அழைக்கப்பட்ட பூம்புகார் சுனாமிக்குப் பின் கலையிழந்த நிலையில் கிடக்கிறது. இதனைச் சரிசெய்தால் சிறந்த சுற்றுலாத் தலமாக மீண்டும் உருவெடுக்கும்.

சர்க்கஸ் சாகசத்தில் தினம் தினம் எங்கள் மாணவர்கள் பேருந்தில். என்ன காந்தமோ, அத்தனை பேரும் ஒரே பேருந்தில்? "பேருந்து இல்லை முதல் மணிக்கு எங்களால் சரியான நேரத்திற்குக் கல்லூரிக்குச் செல்ல முடியவில்லை" என்று எங்கள் மாணவர்கள் சொல்வது என் காதில் இன்னும் கேட்டுக் கொண்டிருக்கிறது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக ஆயத்தப் பணிகளை மேற்கொள்வார்களா? விடிவை எதிர்பார்த்து மக்களும் மாணவர்களும் . . .

ஆசிரியர்

புதிய உதயம் . . .

# சத்யா பேன்ஸி கவரிங்

177, நெ.2 ரோடு, மகாவிஷ்ணு டிரேட் சென்டர்,



சுந்தரம் தியேட்டர் எதிரில்,



கூறைநாடு, மயிலாடுதுறை – 2.

Cell : 9443826349

புத்தம் புது டிசைன்களில் தரமான பேன்ஸி வளையல், தோடு, கிளிப் மற்றும் கவரிங் நகைகள், அழகு சாதனப் பொருட்கள் குழந்தைகளுக்கான விளையாட்டுப் பொருட்கள் வாங்க அன்புடன் அழைக்கின்றோம். . .

குறிப்பு : சுபநிகழ்ச்சிகளுக்கான தலைசெட் வாடகைக்கு கிடைக்கும்.
ஹாஸ்டல் மாணவர்களுக்கான பிளாஸ்டிக் வாளி, கப்புகள் கிடைக்கும்.

TEXMO

"டெக்ஸ்மோ" போர்வெல் சப்மெர்சிபிள் சிங்கிள் பேஸ் டொமஸ்டிக் பம்ப்ஸ் சிங்கிள் பேஸ் ஜெட்பம்ப்ஸ்

AN ISO 9001 CO

AQUATEX

'அக்வாடெக்ஸ்' விவசாய மோனோபிளாக் ஓப்பன் வெல் சப்மெர்சிபிள்ஸ் எலக்ட்ரிக் மோட்டார்ஸ்



சிறந்த முறையில் வீடு மற்றும் விவசாய உபயோகத்திற்கான ஆழ்குழாய் கிணறு அமைத்து நீர்முழ்கி மோட்டார் போட்டுக் கொடுக்கப்படும்.

அங்கீகாரம் பெற்ற விற்பனையாளர் :-

**பேபி டிரேடர்ஸ்**

117, பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை - 609 001
போன் : 222323

**பேபி நூர்ஜஹான் எண்டர்பிரைசஸ்**






## ஹைக்கூ. . .

உயிருள்ள மனிதனை
உயிரில்லாதவன்
ஆளுகிறான்
பணம் . . .!



க.ஜஸ்டிஸ்பாபு
இளம் வேதியல் (முதல்)

## சுதந்திரம்

கேளுங்கய்யா கேளுங்க
கிளி ஜோசியம் கேளுங்க
உங்கள்
எதிர்கால பலன்களுக்காக அல்ல
கிளியின் ஒரு நிமிட
சுதந்திரத்திற்காக
கேளுங்கய்யா கேளுங்க
கிளிஜோசியம் கேளுங்க. . .!



பா.விஜய்
முதுகலை ஆங்கிலம் (முதல்)

ஓர் அம்மா தன் பையனை மண்ணெண்ணெய் ஊற்றிக் குளிப்பாட்டுகிறாள் ஏன்?
ஏனெனில் அவன் "துருதுரு" வென இருக்கிறானாம்!!!

பா.சரண்யா
இளம் கணிப்பொறியியல் (முதல்)

## விலை

வண்ணத் தொலைக்காட்சியில்
வண்ணச்சேலைகளின்
விளம்பரங்களைக் கண்டாள்
அதன்மீது ஆசையும் கொண்டாள்
அதை வாங்கவும் சென்றாள்
மனமுடைந்து திரும்பினாள்
சேலையைக் காட்டிய விளம்பரங்கள்
விலையைக் காட்டியிருக்கக் கூடாதா?



இரா.கோகுல்ராஜ்
முது நுண்ணுயிரியல் (முதல்)

ஏ
வி
சி

மயிலை மாநகரில் மகளிர்க்காக நவநாகரீக
டிசைன்களுடன் சிறப்பாக செயல்பட்டுவரும்
ஒரே நிறுவனம்

PARAGON LADIES *Fashion Maker*

உங்கள் எண்ணங்களைச் சிறப்பாக
வடிவமைத்துக் கொள்ள
இன்றே வருகை தாருங்கள் !

PARAGON
LADIES
*Fashion Maker*



27/3, Vandikkara Street,
MAYILADUTHURAI -1.





## துணுக்குகள்...

**திரையரங்கு இல்லாத நாடு எது?**
**சவுதி அரேபியா**
**எந்த நாட்டில் பெண்களுக்குக் கட்டாய இராணுவப் பயிற்சியளிக்கப்படுகிறது?**
**இஸ்ரேல்**

## ஜோக்ஸ்



*கஸ்டமர் : யோவ்! சட்னியில கல்லு கிடக்குயா*
*சர்வர் : அட போங்க சார்... அவனவன் சிட்னியிலேயே கல்லு வெச்சுக்கிட்டு அலையறான்...*

எஸ்.லோகியா
இளம் இயற்பியல் (இடை)



## விதவை...

*ஆண்டுக்கு ஒரு முறை*
*விதவையாவதா?*
*அதிசயமாய்த் தான் இருந்தது*
*நான் மரங்களைச் சொன்னேன்.*

## ஹைக்கூ...

ச.ராதிகா
இளம் கணினிப்பயன்பாட்டியல் (இடை)

*பச்சிளம் குழந்தையின்*
*பால்பசி ஓலம்*
*பக்கத்துக் கோயில்களிலோ*
*பாலாபிஷேகம்....*



Cricket - னா சச்சின் . . !

Browsing - னா லவ்லி . . !

Ph : 04364 - 222517

Cell : 9443235172

**LOVELY BROWSING CENTRE**

(NOW WITH 512 kbps BROAD BAND HIGH SPEED CONNECTIVITY)



- Internet
- E-mail
- DTP
- Lamination & Spiral
- Scanning
- Colour Print & Laser Print
- Voice Chat & Web Cam.
- CD Writting
- Available CD & Floppy
- All Project Works Done Here.

Opp : Bus Stand, Hotel Imbala,

N.M. Zackariya building, Mayiladuthurai 609 001.

Email : lovely_myl@yahoo.co.in







# திறவுகோல்

**நம் நாடு சுதந்திரமடைந்து கிட்டத்தட்ட அரை நூற்றாண்டிற்கும் மேல் ஆகின்றது. சுதந்திரம் என்பது நம்மை யாரும் கட்டுப்படுத்தாது இருக்க வேண்டும் என்பது மட்டுமன்று. நம் அடிப்படை உரிமைகளை நாம் பாதுகாத்துப் பயன்படுத்திக்கொள்வதும் தான்.**

நம்மால் உருவான அரசாங்கத்திடமிருந்து நாம் பெறவேண்டிய உரிமைகளைப் பெறுவதும், நம் கடமைதான். அந்த நோக்கில் அரசு மக்களுக்காக ஒரு சட்டத்தை அறிவித்துள்ளது அது தகவல் அறியும் உரிமைச் சட்டம். அரசாங்கம் இச்சட்டத்தை அனைத்துத்தரப்பு மக்களிடமும் கொண்டு செல்ல அனைத்துத் தன்னார்வ மற்றும் பொதுத்துறைகளைக் கேட்டுக்கொண்டுள்ளது. அதன் பேரில் மாணவர்களுக்கும் இச்சட்டம் பற்றி விளக்கம் அளிக்க நம் இளந்தூது முனைந்துள்ளது.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் என்பது அரசிடமிருந்து நமக்குக் கிடைக்கவேண்டிய தகவலை அரசாங்கத்திடம் அணுகிப் பெறுவதற்கான உரிமைச்சட்டம். நாம் சம்பந்தப்பட்டது அல்லாத மூன்றாம் நபரின் தகவலையும் பெற உரிமை உண்டு.

அரசின் இரகசியங்கள், மற்றும் நாட்டின் பாதுகாப்பு குறித்த தகவல்களைத் தவிர மற்ற தகவல்களைப் பெற முடியும். ஆவணங்கள், பதிவேடுகள், நகல்கள், அச்செடுப்புகள் மற்றும் கணினியில் வைக்கப்பட்டிருக்கும் தவல்கள் முதலியவற்றைப் பெற முடியும்.

கணினித் தகவல்களை வட்டுகள், நெகிழ்வட்டுகள் மூலமாகப் பெறலாம். தகவல் கூறுவோர் விண்ணப்பங்களை மைய அல்லது மாநில உதவிப் பொது தகவல் அலுவலரிடம் அனுப்புதல் வேண்டும்.

அவ்வாறு வரும் விண்ணப்பங்களையும் மேல் முறையீடுகளையும் அவர்கள் மைய அல்லது மாநிலப் பொதுத்தகவல்களையும் அலுவலருக்கோ, முதுநிலை அலுவலருக்கோ, அந்தந்த ஆணையத்திற்கோ அனுப்புதல் வேண்டும். இவ்வாறு வரும் விண்ணப்பங்களை மையப் பொதுத்தகவல் அலுவலரும், மாநில பொதுத்தகவல் அலுவலரும் பரிசீலித்து நியாயமான உதவிகளைச் செய்தல் வேண்டும்.

தகவல் கோரும் விண்ணப்பங்கள் ஆங்கிலத்தில் அல்லது இந்தியில் அல்லது தகவல் கோருபவரின் இடத்தின், வட்டாரத்தின் அதிகாரப் பூர்வ மொழியிலும் இருக்கலாம். விண்ணப்பத்துடன் ரூபாய் பத்து செலுத்தி விண்ணப்பதினை அனுப்புதல் வேண்டும். வேண்டுகோள் கிடைக்கப்பெற்ற முப்பது நாட்களுக்குள்ளோ, அதற்கு முன்பே அதற்குரிய கட்டணத்தைச் செலுத்தப்பட்டதின் பேரில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தகவலை அளிக்க வேண்டும்.

மேலும் குறிப்பிட்ட கால அளவிற்குள் தகவல் அளிக்கவில்லையென்றால் சம்பந்தபட்ட பொது அதிகார அமைப்பு அந்தத் தகவலைக் கட்டணம் ஏதுமன்றி இலவசமாக அளிக்க வேண்டும். அதிகாரிகள் அளிக்கும் தகவலுக்கு ஏற்றவாறு கட்டணம் செலுத்த வேண்டும். உருவாக்கப்படும் அல்லது நகல் எடுக்கப்படும் ஒவ்வொரு பக்கத்திற்கும் ரூபாய் இரண்டும், வட்டுகளின் தகவலைப் பெற ரூபாய் ஐம்பதும் செலுத்த வேண்டும்.

பதிவேடுகளை ஆய்வு செய்வதற்கு முதல் ஒரு மணிநேரத்திற்குக் கட்டணம் ஏதும் கிடையாது. அதற்குப்பிறகு ஒவ்வொரு பதினைந்து நிமிடத்திற்கும் ரூபாய் ஐந்து வசூலிக்கப்படும். புகார் மற்றும் மேல் முறையீடுகளைக் குறிப்பிட்ட கால அளவிற்குள் முடிக்காமல் விட்டாலோ, கொடுக்கப்படும் தகவலால் விண்ணப்பதாரருக்குப் பாதிப்பு ஏற்பட்டாலோ சம்பந்தப்பட்ட அதிகாரி அவ்விண்ணப்பம் பெறப்படும், அல்லது தகவல் அளிக்கப்படும் தேதி வரையிலும் நாளொன்றுக்கு ரூ.250 வீதம் அபராதம் செலுத்த வேண்டும். மேலும் அவர் மீது பணியாளர் விதிகளின் படி ஒழுங்கு நடவடிக்கை எடுக்க மையத்தகவல் ஆணையம், அல்லதை மாநிலத் தகவல் ஆணையம் பரிந்துரை செய்யலாம்.

ஆசிரியர் குழு





# அம்மா

சுமந்தே பழக்கப்பட்டவள் நீ
சுகமானாலும் சோகமானாலும் . . .
நீ ஒரு சுயநலவாதி
பசியையும், துக்கத்தையும்
நீமட்டுமே பங்குபோட்டுக் கொள்கிறாய்
நீ தற்பெருமை பிடித்தவள்
உதவாக்கரை பிள்ளையைக் கூட
உயர்வாய்ப் பேசுபவள்
நீ கல்லாகவும் இல்லை
கனிப்பொருளாகவும் இல்லை
ஆனாலும் உன் போல் என்மீது
பாசம் கொள்ள இனி உலகில்
உயிர்களே இல்லை
கிள்ளிக் கொடுக்கும் உலகிலே
அள்ளிக் கொடுப்பாய் அன்பாய்
அளந்து பார்க்க முடியவில்லை
அதனால் உன் கடனும் தீரவில்லை
தீர்ப்பேன் கடனை நிச்சயமே
அடுத்த பிறவியில்
உன்னைச் சுமப்பேன்
சேயாய் இது சத்தியமே . ..

வைஷ்ணவி
இளம் கணினிப்பயன்பாட்டியல் (முதல்)

ஏ
வி
சி

# TATTI

(TamilNadu Advanced Technical Training Institute)
(A SCHEME OF R.M. EDUCATIONAL TRUST,
Reg.No. 305, dt. 31/12/1993), Chennai - 02.

Regd.BY GOVT. OF TAMILNADU BOUND TO GOVT. OF INDIA

COMPUTER HIGHER EDUCATION

9th YEAR ANIVERSARY CELEBRATIONS

OUR COURSE COMBINATION WITH EXCELLENT OFFER

- TALLY 6.3 & 7.2 PGDCA DIP IN ANIMATION
- ADV. DIP. In RDBMS
- C, C++,Unix/Linux, VC++
- AutoCAD, PRO-E, CATAIYA
- DTP
- Dip. in Hardware Technology (PGDHT)
- Web Designing
- Advanced Diploma in Multimedia (PGADM)
- ASP.NET,VB.NET/ JSP, J2EE/ PHP
- . NET Frame Work Casp.Net, UA.NET, C# J2EE JSP Services, EJP, API's

MAXIMUM FOR MINIMUM

SPECIAL COACHING FOR ALL COLLEGE STUDENTS COMPUTER PROJECTS

மத்திய மற்றும் மாநில அரசின் நிரந்தர அங்கீகாரத்துடன்

"Delay is the enemy of efficiency"

Keep in touch.

13-D, IInd Floor, Cutchery Road,
Mayiladuthurai. ☎: 241129 Cell :9865092034.
H.O: Gee.Gee. Complex, 42/25, Anna Salai, Chennai - 2.





# இராணுவம்

இராணுவம். . . என்று கூறும் போதே நம் நெஞ்சம் நிமிர்கிறதல்லவா? அப்படிப்பட்ட இராணுவத்திற்கு வித்தாக அமைந்தது யார் தெரியுமா? நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ். நாம் ஆங்கிலேயர்களிடம் அடிமையாக இருந்தபோது பிரிட்டிஷ் அரசாங்கம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இந்தியர்களை அனுப்பி ஜப்பானை எதிர்த்துப் போரிடச் செய்தது. அதில் ஜப்பான் அரசாங்கத்திடம் நம்மவர்கள் அனைவரும் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டனர்.

இ
த
ழ்

சிலகாலம் சென்ற பின்னர் நேதாஜி ஜப்பான் அரசாங்கத்திடம் பேச்சு வார்த்தை நடத்தி இந்தியர்களை விடுவித்து அவர்களைக் கொண்டு இந்திய தேசியப்படை என்னும் பெயரில் ஆங்கில அரசாங்கத்தை எதிர்த்துப் போரிடச் செய்தார். இவர்கள் மணிப்பூர் வரை ஆங்கிலேயரை எதிர்த்துப் படையெடுத்து வந்தனர். இப்படை வீரர்கள் நாட்டைக் காப்பாற்ற வேண்டும் என்ற ஒரே எண்ணத்தை மட்டும் குறிக்கோளாகக் கொண்டு போரிட்டனர். இதில் தமிழகத்தைச் சேர்ந்த படைவீரர்களும் உண்டு. இவர்களில் குறிப்பிடத்தக்கவர் நம் கல்லூரியின் தற்போதைய பிரபல வேதியல் பேராசிரியர் ஒருவரின் தந்தையும் ஆவார். இரண்டாம் உலகப்போரின் போது ஜப்பான் அழிய நேரிட்டது. அதனால் நம் படைகள் அனைத்தும் சரணடைய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

தன் குடும்பங்களையும், உறவினர்களையும் நினையாது நாட்டின் நலனுக்காகத் தங்களின் உழைப்பைக் கொடுத்த இவர்களைப் பின்பற்றித்தான் சுதந்திரம் அடைந்த பின் இந்திய இராணுவப் படை என்ற ஓர் அமைப்பு அமைக்கப்பட்டது. இதன் தலைமையகம் புதுதில்லியில் அமைந்துள்ளது. தற்போதைய தலைமை அலுவலராக ஜெனரல் என்.சி.விஜ் பணியாற்றி வருகின்றார்.

M ☎ : 220313

மெட்ரோ
புட்வேர் & கிப்ட்ஸ்

தரமான காலணிகளும்,
உயர்தர பரிசுப் பொருட்களும்
குறைவான விலையில் வாங்கிட
சிறந்த நிறுவனம் . . .



ஸ்ரீ மகா விஷ்ணு டிரேட் சென்டர்
(சுந்தரம் தியேட்டர் எதிரில்)
மயிலாடுதுறை.





இந்தியத் தரைப்படை தினம் ஜனவரி 15 ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது. இவற்றின் மிக உயரிய பதவி பீல்டு மார்ஷல் என்பதாகும். பின் வரும் காலங்களில் இராணுவத்திற்கெனத் தனியிடம் கொடுத்து மக்களின் மனத்தில் இடம்பெறச் செய்தது நம் அரசாங்கம். அன்று முதல் இன்று வரை பல்லாயிரக்கணக்கானோர் நம் நாட்டினைப் பாதுகாக்க இராணுவத்தில் சேர்ந்த வண்ணமே உள்ளனர். இவற்றிற்கென பிரிவுகளும், தலைமை அலுவலகங்களும் அமைக்கப்பட்டுள்ளன. கிழக்குப் பிரிவுக்குக் கொல்கத்தா தலைமையிடமாக உள்ளது. மத்திய பகுதி பிரிவுக்கு லக்னோ தலைமையிடமாக உள்ளது. பயிற்சிப் பிரிவுக்கு மாவோவில் தலைமை அலுவலகம் உள்ளது.

இராணுவ வீரர்களுக்கெனத் தனிப்பயிற்சி மையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

1. தேசிய பாதுகாப்பு மையம் - பூனா
2. இந்திய இராணுவ அகாதமி - டேராடூன்
3. தேசியப் பாதுகாப்புக் கல்லூரி - புதுதில்லி
4. தேசியப் பாதுகாப்புப் பணியாளர்கள் கல்லூரி - வெல்லிங்டன்
5. இராஷ்டிரிய இந்திய இராணுவக் கல்லூரி - டேராடூன்
6. இராணுவ அறிவுத்திறன் பயிற்சிப் பள்ளி - பூனா
7. இந்திய இராணுவ போலீஸ் மத்திய பள்ளி - ஃபைசாபாத்
8. ஆயுதப்பிரிவு மருத்துவக் கல்லூரி - பூனா
9. இராணுவ அதிகாரிகள் பயிற்சி பள்ளி - சென்னை
10. இராணுவத் தொலைத்தொடர்பு பொறியியல் கல்லூரி - மோவ்

இராணுவ வீரர்களுக்கெனத் தனிப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. அவர்களை உடலளவிலும், மனத்தளவிலும் தயார் செய்த பின்புதான் எல்லையோரக் காவல் பணிக்கும், மற்ற பாதுகாப்பு இடங்களுக்கும் அனுப்பி வைக்கப்படுவர்.

கொட்டும் மழையிலும், அடர்ந்த பனியிலும், கொளுத்தும் வெயிலிலும் தாங்கள் உயிரைப் பணயம் வைத்து நாட்டுக்காகவும், நமக்காகவும் செயலாற்றும் உயரிய தியாகத்தை நினைப்போம், அவர்களைப் போற்றுவோம்!

ஆசிரியர் குழு

# ஏழை முதிர்கன்னி

ஏ
வி
சி

பெயரோ இளவரசி
இவள் ஆகவில்லை இல்லத்தரசி
வீதியிலே முதல் வீடு
விதியிலே கருப்புக் கோடு
பெண் பார்க்க வந்தாங்க
பொன் கேட்டுப் போனாங்க
இது வாடிக்கையானது தான்
வரதட்சனை கோளாறுதான்
அக்கம் பக்கம் பேசுறாங்க
ஏழுகழுதை வயசாச்சி
எதுக்கு மணமாகலைன்னு
பணமும் நகையும் பத்தலைன்னு
பாதிப்பேரு போய்ட்டாங்க
வீடும் பெண்ணும் பிடிக்கலைன்னு
மீதிப்பேரு போய்ட்டாங்க
ஆழ் கனவில் நாள்தோறும்
அம்மி மிதிப்பேனா அருந்ததி பார்ப்பேனா
அந்திப் பொழுதினிலே அத்திப் பூத்திடுமோ
ஏழையவள் நெஞ்சினிலே
எழுந்திருந்த கேள்வியொன்னு
புகுந்த வீடு போவதற்குள்
போகும் இடம் சுடுகாடோ?
தாவணிக் கனவுகள் தாவியதென்ன
தாமிரபரணி தடம் மாறிடுமோ
இதோ இவள்
காற்றில் வைத்த கற்பூரமாய்க்
காகிதக் கப்பலில் கண்ணீரில் மிதக்கிறாள்
இரவுப் பொழுதெல்லாம்
தலையணையோடு அவளைத்
தவணை முறையில்
நனைப்புகளோடு
தள்ளாடும் முதிர்கன்னி



அ. ஆதிநாராயணன்
முது நுண்ணுயிரியல் (நிறை)





# அன்பே . . .

இ
த
ழ்

உன் அழகைக் கேட்டுப்
பார்க்க வந்தேன்
வந்தபின் உன் அழகாலேயே
மயங்கிப்போனேன்
உன்னைத்
தழுவிக் கொள்ள ஆசை எனக்கு
ஆனால்
தழுவினால் கசங்கிப்போவாயே
நான் முழுமையாக
ரசிப்பது உன் உருவம் மட்டும் தான்
அதிலும் – அதிகமாக ரசிப்பது
உன் இதழைத்தான்
நீ இதழ் விரித்துச் சிரித்தால்
சிதறிப்போவேன் நான்
அய்யோ அய்யய்யோ
உன் அழகு என்னைப் பைத்தியமாக்குதே
ஏய் – நீ
பெண்ணாகப் பிறந்திருந்தால்
காதலித்திருப்பேனே
மலராகப் பிறந்துவிட்டாயே
நீ மலராக பிறந்துவிட்டாயே
என்ன செய்வேன்
நான் என்ன செய்வேன் . . . ?



ஜே. விவேகானந்தன்
முது வணிகம் (நிறை)

# ஹைக்கூ



குப்பைத் தொட்டியில்
அழும் குழந்தை
இழந்தது தாயை
இழக்கவில்லை
பசியை. . .!

கோ. கண்ணன்
முதுகலை பொருளாதாரம் (முதல்)

BISMI FURNITURES

பிஸ்மி
பர்னிச்சர்ஸ் (பி) லிட்.,

தீன் காம்ப்ளக்ஸ்,
O.S.M. நகர், மயிலாடுதுறை.
222856

80, நாகேஸ்வரன் வடக்கு
கும்பகோணம்
2425262

மயிலாடுதுறை மற்றும் கும்பகோணம் தவிர வேறு எங்கும் கிளைகள் இல்லை





# ஈழப்போர்

ஈழத் தமிழா . . .
என்னையும் சேர்த்துக்கொள்
உன் ஈமச்சடங்கில்
வாழ மனமில்லை – உன்
வாழ்வை நினைக்கையிலே
நானும் ஓர் போராளிதான்
உனக்காய்ப் போராடும் – என்
இதயத்தினால்
ஒப்பந்தமிட்டு என்ன பயன்?
அறுபத்து நான்கு அனாதைக்
குழந்தையை அபராதமாய்க்
கொன்றீரே . . .
குழையும் குழந்தைகளின்
உடைந்த சிரிப்புக் கனவில் போனதே . . .
ஆனால் – நான் மட்டும்
சாகவில்லை என்று – என்
தமிழகத்தைக் கொன்று
நிரூபித்து ஈழப்போர் . . .
மேகத்தில் ரத்தம்
பூக்களின் மாமிசம்
கத்தியில் கண்ணீர் . . .
இன்னும் இன்னும் ஏராளம்
போர்களை நிறுத்து
புன்னகையை உடுத்து . . .



பு. வீரமணி
முது விலங்கியல் (முதல்)

# வறுமை ஒளி

வீதியில் ஒளிரும் சூரியன்
தெரியுதடா !
வீட்டினுள் சாப்பிடும்
ஏழையின் கஞ்சி சோற்றில் !



க. சௌந்தரபாண்டியன்
இளம் வேதியல் (நிறை)

ஏ
வி
சி

# A&D SOLARIS

IInd Floor, Sree Mahavishnu Trade Centre
(Opp : Sundaram Theatre)
No. 2 Road, Mayiladuthurai 609 001.
Ph : 04364 - 228362, 22836364

MA FOI
ACADEMY
CAREER TRAINING

- BPO and Call Centre Training for Graduates
- Intensive training in the English Language
- Conversational Skills and Cross cultural sensitivity
- Placement assistance in leading companies
- Work in the biggest BPO's and call centers

Laser Print Out
**Re. 1/-**
(* Additional Copies only)

**Programmes Offered**

- ✓ Code Craft for IT
- ✓ Word Craft for BPO / Call Centers
- ✓ Retail Craft for Counter Sales
- ✓ Sales Craft for Outbound sales
- ✓ Carrer Craft for placement preparation
- ✓ ID Craft for Instructional design
- ✓ Tech Craft for Technical Publishing

**HARDWARE**

- System Sales Service
- Laptop Sales
- LCD Projector Sales



Rs. 33,500/-

**DTP**

- College Project Works
- School & College ID Cards
- School Note Books
- Screen Printing
- Xerox
- Lamination
- Offset Printing
- Laser Colour Printing
- Spiral and Hard Binding
- Visiting Cards & Invitation
- Digital Photo Works

**A & D Digital FLEX**

- Flex & Vinyal Printing





# அநாதை

தாய் தந்தையின்றித்
தொட்டிலில் கிடக்கும்
குழந்தைகள் மட்டுமா
அநாதை. . . .?

இல்லை ! இல்லை!
அன்புத் தாயிருந்தும்
அமுதப் பாலிருந்தும்
அலுவலகப் பணி
அவசரப்படுத்தியதால்
தாய்ப்பாலுக்கு ஏங்கும்
குழந்தைகளும் ஓர்
அநாதை. . .!

ஏர் இருந்தும் எருது
திருந்தும்
நீர் இல்லா வறட்சியினால்
விவசாயிகளும்
ஓர் அநாதை. . .!

பள்ளி இருந்தும்
படிக்க ஆர்வமிருந்தும்
பணமின்மையால்
பள்ளிக்குச் செல்லாமல்
பணிக்குச் செல்லும்
குழந்தை களும் ஓர்
அநாதை. . .!

பெற்றெடுத்த மகனிருந்தும்.
மகளிருந்தும்
முதியோர் இல்லத்தில்
தாய். தந்தை இருப்பதால்
பெற்றோர்களும்
ஓர் அநாதை. . .!

உழைத்த உழைப்பிற்கு
ஊதியம் கிடைக்காமல்
வறுமையின் பிடியில்
வாழ்க்கை நடத்துவதால்
தொழிலாளர்களும்
ஓர் அநாதை. . .!

அமுதத் தாய்மொழி இருந்தும்
தாய்ப்பள்ளி இருந்தும்
அந்நியமோகம் கொண்டு
ஓடுவதால்
தமிழனும் ஓர் அநாதை. . .!

அனைத்து வளமிருந்தும்
அந்நியனிடம் கடன்பட்டுப்
போனதால் இன்று
இந்தியாவும்
ஓர் அநாதை
எங்கும் அநாதை . . .
எதிலும் அநாதை. . .

கி.ந.இராஜா
முது பொருளியல் (நிறை)

இ
த
ழ்

ஏ
வி
சி

Ph : 220486
Cell : 9443984335




# Micro-Chip

We are conducting Hardware Course

**(A COMPUTER SHOWROOM)**
**SALES SERVICE & ALL COMPUTER PERIPHERALS AVAILABLE**

**கம்ப்யூட்டர் இப்பொழுது விலை**
**ரூ. 9999/- முதல் . . .**

*Contact :*
No. 4, Agorasasthirigal Building,
1st floor, 77, Pattamangala Street,
Mayiladuthurai -609 001.





பரிசு கூப்பன்

**குரு டிஜிட்டல் போட்டோ ஸ்டுடியோ**

ராஜ் பில்டிங், பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை. ☎ : 222382

பெயர் ..............................................

முகவரி..............................................

..............................................

புதிதாக பாஸ்போர்ட் போட்டோ எடுத்துக் கொள்பவர்களுக்கு ரூ. 10 சிறப்புத் தள்ளுபடி உண்டு.

## துணுக்குகள்

இந்தியாவிலுள்ள நான்கு சர்வதேச விமான நிலையங்கள்

| | | |
|---|---|---|
| **சென்னை** | - | **மீனம்பாக்கம்** |
| **மும்பை** | - | **சாண்டகுருஸ்** |
| **கொல்கத்தா** | - | **டம் டம்** |
| **டெல்லி** | - | **பாலம்** |

தமிழ்நாடு அரசின் சின்னம் எந்தக் கோயில் கோபுரம் கொண்டுள்ளது ?

**ஸ்ரீவில்லிபுத்தூர் திருக்கோயில்**

**துரை.கணேசமூர்த்தி**
இளம் வரலாறு (நிறை)



சிங்கப்பூர்,
அமெரிக்கா ஸ்பெஷல் . .

திருமண வீடியோ சீடி + போட்டோ சீடி பேக்கிங்
100 MUSIC போட்டா சீடி

வீடியோ கவரேஜ் + CD 2 Set

12x8 சைஸ் நான்கு போட்டோ லேமினேஷன்

உள்பட இவை அனைத்தும் ரூ. 3,500/- மட்டுமே

S. குருமூர்த்தி

**குரு டிஜிட்டல் போட்டோ ஸ்டுடியோ**

ராஜ் பில்டிங், பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை. ☎ : 222382


ஏ
வி
சி

கடவுள்



*அடிக்கடி சென்று பார்க்கிறேன்*
*ஆனால்*
*அவனை (கடவுளை)*
*பார்க்கமுடியவில்லை . . .!*

ச.முகிலன்
இளம் கணிதம் (இடை)

## ஜோக்ஸ்



பணியாள் : மன்னா! உங்க மகுடத்தை ராணி அர்ஜெண்டா கேக்குறாங்க

மன்னர் : எதுக்கு?

பணியாள் : அவசரமா நெல் அளக்கணுமாம்.

அ.ஜெசிமா பர்வீன்
இளம் கணிதம் (முதல்)





**அரசியலில் படித்தவர்களை விடப் படிக்காதவர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர். இந்தச் சூழ்நிலையில் படித்துப் பட்டம்பெற்றவர்கள் மட்டுமே அரசியலுக்கு வரவேண்டும் என்ற சூழ்நிலை ஏற்பட்டால் நாடு எப்படி இருக்கும்? என்ற கேள்விக் கணைகளோடு நம் மாணவர்களைச் சந்தித்தோம். அவர்களின் பதில்களில் ஒரு சில . . .**

இ
த
ழ்

# சர்வே

அனுபவம் வேண்டும். சரியாக மெயின்டன் பண்ண முடியாது.

தெட்சிணாமூர்த்தி
இளம் தாவர உயிரியல் (இடை)

வாரிசுகள் அரசியலுக்கு வருவது குறையும். அதனால் அனைத்துத் தரப்பினருக்கும் வாய்ப்புகள் கிட்டும். சாதி வேறுபாடுகள் குறையும்.

கே.இராஜேஸ்வரி
இளம் நுண்ணுயிரியல் (இடை)

இளைஞர்களால் கண்டிப்பாக உருவாக்க முடியும். உருவானால் சூப்பராக இருக்கும்.

ஜி.பிரேம்ஆனந்த்
இளம் இயல்பியல் (முதல்)

படித்தவர்கள் ஆயினும் சரி, படிக்காதவர்கள் ஆயினும் சரி, அனுபவமுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

கே.உமா பரமேஸ்வரி
முது வேதியல் (நிறை)

படித்தவர்களில் சட்டம் தெரிந்தவர்கள் வந்தால் நன்றாக இருக்கும்.

ப.குணசீலன்
இளம் விலங்கியல் (இடை)

படித்தவர்கள் சிந்தித்துச் செயல்படுவர் என்றாலும், அனுபவம் இருந்தால் தான் அரசியலைச் சிறப்பாகச் செய்ய முடியும்.

ஜி.லோகநாயகி
முதுகலை ஆங்கிலம் (முதல்)

சலுகைகள் படிப்புக்கு அமோகமாக இருக்கும். அரசியலே அருமையாக இருக்கும்.

எஸ். இராஜதுரை
இளம் இயல்பியல் (இடை)

படித்தவர்களுக்கு நம் நாட்டின் நிலைமை நன்றாகத் தெரியும். அதனால் அதற்கேற்றவாறு ஆட்சி செய்வர்.

எம்.அனிஸ்பாத்திமா
இளம் இயல்பியல் (முதல்)

படிக்காதவர்கள் என்ன செயலைச் செய்வார்களோ அதைத்தான் படித்தவர்களும் செய்வார்கள். ஏனெனில் காசித்புணம் கண்ணை மறைத்து விடும்.

இரா. [illegible]
இளம் விலங்கியல் (இடை)

திட்டமிட்டுச் செயல்படுவதினால் கல்வியும், தொழில்நுட்பமும் பெருகும்.

கே. [illegible]
முது வணிகம் (நிறை)

ஒரு நல்ல சமுதாயத்தை எதிர்பார்க்கலாம். இந்தியா உலகளவில் முதலிடத்தைப் பெற்றுவிடும்.

ச.சிவராமன்
இளம் பொருளியல் (நிறை)

படிக்காதவர்களாக இருந்தாலும் அனுபவ அறிவு இருந்தால் நன்றாக இருக்கும்.

வி.ரேவதி
இளம் கணினி (நிறை)

ஊழல் பண்ண எளிமையாய் இருக்கும். சீர்திருத்தம் பக்காவாக இருக்கும்.

கே.ஜெகவிரபாண்டியன்
இளம் தாவர உயிரியல் (இடை)

புதியபுதிய சட்டங்கள் வரும். புதிய துறைகள் மூலம் நாடு வளம் பெறும்.

தா.சுகந்தி
இளம் வேதியல் (இடை)

படித்தவர்களையும், நல்லவர்கள் என்று சொல்ல முடியாது. அவங்க தான் பாதிக்குப் பாதி கமிஷன் எடுப்பாங்க.

எஸ்.சுந்தரவடிவேல்
இளம் விலங்கியல் (முதல்)







பட்டம் படித்தால் போதாது. கேள்வி அறிவு வேண்டும். அப்போது தான் சிறந்த ஆட்சி அமையும்.

இராஜேஸ்வரி
இளம் கணிதம் (இடை)

உலக நாடுகளில் முதன்மை வகிக்கும் சாதி, மதங்கள் ஒழியும்.

க.ஆனந்தராக்
இளம் தாவரஉயிரியல் (நிறை)

படிப்பறிவிற்கும் அரசியலுக்கும் சம்பந்தமே இல்லை.

ஜெ.சரண்யா
இளம் கணிதம் (இடை)

மக்கள் மனக்கவலையைப் போக்க முடியும். முக்கியமாக சாதி, சமயங்கள் ஒழியும். செய்திகள் நிறையத் தெரியும்.

லோ.இளையராஜா
இளம் வரலாறு (இடை)

அது ஒரு சிறப்பானதாகும். எந்தப் பிரச்சனையும் இல்லாத மக்களுக்கு நல்ல சேவகனாக இருப்பார்கள்.

பி.சிலம்பரசன்
இளம் தாவர உயிரியல் (இடை)

அரசியல் நன்றாக இருக்கும். இருந்தாலும் நாட்டின் மீது பற்று இருக்க வேண்டும்.

மு.மணிமாறன்
இளம் விலங்கியல் (இடை)

அரசியல் என்ற சொல் ஒரு பொன்மொழியாக மாறிவிடும்.

ரெ.செல்வகுமார்
இளம் பொருளியல் (நிறை)

படிக்காதவர்களே இந்தளவு நாட்டினை உயர்த்தும்போது, படித்தவர்கள் இன்னும் உயர்த்திவிடுவார்கள்.

ஜெ.தினேஷ்
இளம் விலங்கியல் (இடை)

மாணவர்களில் பெரும்பாலானோர் படித்துப் பட்டம் வாங்கியவர்கள் அரசியலுக்கு வருவதை விரும்பிக் கொண்டுதான் இருக்கிறார்கள். அவர்களின் விருப்பம் நிச்சயம் நிறைவேறும் என்று கூறி விடை பெற்றோம்.

ஆசிரியர் குழு



From :-

**MEGAA**

**Xtra Genius**

**EDUCATION TRUST**

**Abacus Education**

(Regd. by Govt. of TamilNadu)

30/15, II floor, Deen Plaza,

Mayiladuthurai.

☎: 04364 - 220626

Cell : 9865194424

**MET OFFERS**

- PGDCA, PGDCS
- HDCA, DDTP, ADCHM
- DCT, DCAS, DSM
- D.JAVA, D.A.CAD,D.E. COM
- ALL CERTIFICATE COURSES
- TALLY
- D.NET.
- ADCHM (HARDWARE)
- **System Sales & Service**

**For College Students Project Work**

Per Page 7 Rupees (including Rough Copy)

Floppy Matters Per Page 3 Rupees






# ஒரு நிமிடம் யோசியுங்கள் . . .

✱ வீட்டில் சமைத்த உணவில் குறைசொல்லப் போகிறீர்களா? அதற்கு முன் ஒரு வேளை உணவுகூட இல்லாமல் இருப்பவர்களை நினைத்துப் பாருங்கள்.

✱ யாரையாவது கோபத்தில் திட்டப்போகிறீர்களா? வாய் பேசாத ஊமையை நினைத்துக்கொள்ளுங்கள்.

✱ அடுத்தவர்களைப் பற்றிக் குறைசொல்லப் போகிறீர்களா? உங்களிடம் உள்ள தவறைப் பற்றி யோசியுங்கள்.

✱ தேவையில்லாத செலவு செய்யப் போகிறீர்களா? அதற்கான பணம் எப்படி கிடைத்தது என்று யோசியுங்கள்.

✱ தீய பழக்கங்களில் ஈடுபடப் போகிறீர்களா? அதனால் கெட்டழிந்தவர்களைப் பற்றி யோசியுங்கள்.

✱ படிக்கும் நேரத்தை வீணாகக் கழிக்கப் போகிறீர்களா? வேலை செய்து படிப்பவர்களை நினைத்துப் பாருங்கள்.

✱ எந்த ஒரு செயலைச் செய்யும் முன்பும் அதிலுள்ள நன்மை தீமைகளை நினைத்துப் பார்த்தால் அதில் ஏற்படும் தவறைத் தடுக்கலாம்.

க.புவனேஸ்வரி
இளம் நுண்ணுயிரியல் (இடை)

# திருப்பதி எலக்ட்ரானிக்ஸ்

☎ : 228401

டி.வி., வி.சி.டி., டி.வி.டி, ஆடியோ சிஸ்டம், ஸ்பேர் பார்ட்ஸ் சேல்ஸ்

DTH ANTEENA, HOME THEATER ALL REMOTE

## திருப்பதி சர்வீஸ் சென்டர்

சிறந்த முறையில் அனைத்து வகையான எலக்ட்ரானிக் பொருட்களும் சர்வீஸ் செய்து தரப்படும்.

விசாலம் ஆர்கேட், 24/2, டவுன் எக்ஸ்டன்ஷன், மயிலாடுதுறை.

---

SUUPER MARKET

☎ : 04364 - 220901

# ஆப்பர் மார்க்கெட்

எங்களிடம் மளிகை பொருட்கள், பரிசுப் பொருட்கள் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் தரமான முறையில் மற்றும் குறைந்த விலையில் கிடைக்கும்.

இலவச டோர் டெலிவரி உண்டு (உள்ளூர் மட்டும்) மற்றும் இலவச உறுப்பினர் சேர்க்கை

12/1A, ஸ்டேட் பாங்க் ரோடு,

மயிலாடுதுறை.


ஏ
வி
சி





இ
த
ழ்

## ஹைக்கூ . . .

*உறங்கிக்*
*கொண்டிருக்கும்*
*கடைக்காரரைக்*
*கொக்கரக்கோ என்று*
*கூவி எழுப்பியது*
*கறியாகக் காத்திருக்கும்*
*சேவல் . . . !*



*உயரத்தில் பறந்த போதும்*
*நன்றியோடு வாலையாட்டும்*
*பட்டம் . . . !*





*வந்து போகும் விருந்தாளிக்கு*
*வயிறுநிறைய உபசரிப்பு*
*வாழ்க்கைப்பட்டு வந்த பெண்ணுக்கு . . . !*

**க.குமார்**
இளம் தாவரவியல் (நிறை)

## துணுக்குகள்

ஓர் ஆண்டில் 4300 மணி நேரத்திற்கு மேல் சூரிய ஒளி (அஃதாவது ஒரு ஆண்டில் 97% நாட்கள்) விழும் இடமாகக் கிழக்கு சகாரா பாலைவனம் உள்ளது. சில சமயங்களில் இயற்கை அதிசயம் பேரதிசியமாக இருக்கிறது. 9.2.1967 முதல் 17.3.1969 வரை செயிண்ட் பீட்டர்ஸ் பார்கில் 768 நாட்கள் சூரிய ஒளி தொடர்ச்சியாக பிரகாசித்தது.

**ம.விஜி**
முது வணிகவியல் (முதல்)

## காற்று

*இருள் சூழ்ந்த*
*கருவறையில் கூட*
*சுவாசித்தேன்*
*தூய்மைக் காற்றை. . . !*
*மரம் சூழ்ந்த இவ்வுலகில்*
*சுவாசிக்கிறேன்*
*மரணக்காற்றை. . . !*



**பா.விஜய்**
முதுகலை ஆங்கிலம் (முதல்)

## ஜோக்ஸ்



*எறும்பைக்*
*கட் பண்ணினால்*
*என்னவாகும் . . . ?*

*கட்டெறும்பாகும். . .*

**எம்.நவரசக்கண்ணன்**
இளம் விலங்கியல் (நிறை)

குறைவான விலை! நிறைவான தரம்!

**குமார் ஷர்ட்ஸ்**

(போன் : 228029)

**இளைஞர்களுக்கான**

**கட்ஷர்ட்ஸ், ஷார்ட் ஷர்ட், பாடி.ஃபிட் ஷர்ட்ஸ்**

மற்றும் **பூட்கட், கம்ஃபர்ட் பிட், ஜீன் காட்டன் பேண்ட்** வகைகள் மிகக்குறைந்த விலையில் வாங்கிடுவீர். தினம் ஒரு தீபாவளியென கொண்டாடிடுவீர்.

**மகாதானத்தெரு,
(காய்கனி மார்க்கெட் அருகில்)
மயிலாடுதுறை.**

**N.R.V.A. AGENCEES**

பெண்களுக்குத் தேவையான உள்ளாடை வகைகள், நைட்டி,. ஷிம்மிஸ் வகைகள், சிறுவர்களுக்கான ஆடை வகைகள், ஆடவர்களுக்கான வேஷ்டிகள், லுங்கி மற்றும் நைட்பேண்ட், பெர்முடாஸ் வகைகள் அனைத்தும் குறைவான விலையில்.

வருகைதந்து, வாங்கி பயனடைவீர் . . .!

**143/1, மகாதானத்தெரு, (காய்கனி மார்க்கெட் அருகில்)
மயிலாடுதுறை.**





ஊனம் உடல் அளவில் அல்ல மனத்தளவில் தான். என்பது நமக்குத் தெரிந்ததே. உடலளவில் ஊனப்பட்டவர்களை ஊக்குவித்து, மனத்தளவில் ஊனமற்றவர்களாக மாற்றச் செய்யும் தொண்டு நிறுவனங்கள் பல உள்ளன. சமுதாயத்தில் அவை ஒரு விழிப்புணர்ச்சியாகத்தான் செயல்படுகின்றன. ஊனமுற்றவர்கள் எல்லோரும் தங்கள் குறைகளை மறந்து மகழ்ச்சியுடன் வாழ்ந்து வருகின்றனர். இந்தவகைத் தொண்டு நிறுவனங்களில் ஓர் உயரிய தொண்டு நிறுவனத்தைப் பற்றி நாம் அலசுவோம்.

# பயோடேட்டா

| | | |
|---|---|---|
| பெயர் | : | **அருமை இல்லம்**<br>செவித்திறன் குறைவுடையோர் நம்பிக்கைப் பள்ளி. |
| தோற்றம் | : | 1987 |
| இடம் | : | கூறைநாடு, மயிலாடுதுறை. |
| உருவாக்கியவர் | : | இராமச்சந்திரன், பர்வதம் இராமச்சந்திரன். |
| தலைவர் | : | ஹில்டா வேதநாயகம். |
| மொத்த மாணவர்கள் | : | 42 |
| கல்வி முறை | : | சைகை காட்டி. உதட்டசைவு. |
| சிறப்புப் பயிற்சி | : | யோகா. கணினி. |
| எதிர்பார்ப்பு | : | இதற்கான பள்ளியில் சேர்த்து கல்வியறிவு தர வேண்டும். |
| ஏக்கம் | : | இக்குழந்தைகளைத் தெய்வக் குழந்தைகள் எனக் கருதி சமூகம் விலக்காமல் இருக்க வேண்டும். |
| பெருமை | : | இங்குப் பயின்ற மாணவர்கள் பலத்துறைகளில் வெற்றிக்கொடி நாட்டி வருகின்றனர். |

ஆசிரியர் குழு

# என் இனிய கல்லூரி



என் அன்புக் கல்லூரியே
எனக்கு விடை கொடு!
எனக்காகக் காத்திருக்கும்
சோழன் பேருந்துகளே
மன்னம்பந்தல் சாலைகளே
எனக்கு விடை கொடுங்கள்!
கல்லூரி வகுப்பறைகளே
விடை கொடுங்கள்
களிமண்ணாய் இருந்த என்னை
கல்லூரியினுள் நுழைய என்னை
உருவாக்கியவர்களே உங்களுக்கு
என் இனிய வணக்கம்!
கல்லூரி ஆசிரியர்களே
விடை கொடுங்கள்!
உங்கள் கைவண்ணத்தில்
உருவாகிய நான்
செல்கிறேன் இதோ
புதியதோர் உலகம் படைக்க
கல்லூரி நாற்காலிகளே எனக்கு
விடை கொடுங்கள்!
நீயும் ஒரு வகையில் ஆசான் தான்
ஆம் பல கலைகளில் ஒன்றான
சிற்பத்தை
உன் மூலம் செதுக்கிப் பெற்றேன்
ஒய்யாரமாக உன்மீது அமர்ந்து
இங்கு நான் படிக்கும் இறுதி நாள்
இதுவாக இருக்குமோ...?



தோழர்களே விடை கொடுங்கள்!
நட்பின் ஆழத்தைக் கற்றுத்தந்த
உங்களுக்கு நன்றியுடைய
நெஞ்சத்துடன் – நான்...
கல்லூரியின் படிக்கட்டுக்களே
விடை கொடுங்கள்!
உயர்வும் தாழ்வும்
வாழ்க்கையின் அங்கங்கள் என்று
எளிதாக எனக்கு உணரச்செய்ததற்காக
நன்றியுடன் – நான்...
என் அன்புக்கு உரித்தானவர்களே
என்று நாம் சந்திப்போம் மீண்டும்
எதுவரை உங்களின் இனிய
நினைவுகள்
எந்தன் நிழல்களாய்த் தொடரட்டும்...
என் கல்லூரிச் செடிகளே
விடை கொடுங்கள்!
இதுநாள் வரை எனக்காக
காத்திருந்து என்னை உன் அசைவால்
வரவேற்றதற்கு நன்றி!
உங்கள் பணியை இன்னும்
தொடருங்கள்..
கல்லூரியின் புதிய வரவுகளை
வரவேற்று மகிழ்ச்சிப்படுத்துங்கள்
என் இனிய கல்லூரியே
எனக்கு விடை கொடு...!

ம. கரிகாலன்
இளம் தாவர உயிரியல் (நிறை)

**சாந்தி மோட்டார்**
**டிரைவிங் ஸ்கூல்**

எண் 5, OSM நகர்,
(விஜயா தியேட்டர் எதிர்புறம்)
மயிலாடுதுறை.

☎: 225728
Cell : 9443568742



சிறந்த முறையில் ஓட்டுநர் பயிற்சி அளித்து உரிமம் எடுத்துத் தரப்படும்.

**A.M.K.R.**
**ஆட்டோ கன்சல்டன்ஸி**

திருமண அமைப்பு செய்து தரப்படும். கார், ஆட்டோ, பஸ், டிராக்டர், லாரி இரு சக்கர வாகனங்கள் வாங்கவும் விற்கவும் மற்றும் வீடு, மனைகள் வாங்கவும், விற்கவும், வாடகை வீடு அமைத்துக் கொடுக்க அணுகவும்.

**A.M. கண்ணன்**
எண் 5, O.S.M. நகர்,
(விஜயா தியேட்டர் எதிர்புறம்)
மயிலாடுதுறை.
☎: 225728
Cell : 9443568742

# முத்தமிழ் புத்தக நிலையம்

(தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற அரசு பாடநூல் விற்பனையாளர்கள்)

**Muthamil Books Centre**
59, Mahadhana Street, Mayiladuthurai - 1.
Ph : 240223

**முத்தமிழ் வாடகை நூலகம்**
**Muthamil Lending Library**
59, Mahadhana Street, Mayiladuthurai - 1.
Ph : 240223

நாவல்கள், கதை புத்தகங்கள், சிறுவர் கதை புத்தகங்கள், வார, மாத இதழ்களும் குறைந்த வாடகைக்கு கிடைக்கும்.





## இப்படியும் அழைக்கலாம்...

| உண்மைப்பெயர் | அடைமொழி |
|---|---|
| மதுரை | கோவில் நகரம், தூங்கா நகரம் |
| திருச்சி | மலைக்கோட்டை நகரம் |
| சிவகாசி | குட்டி ஜப்பான் |
| சென்னை | தென்னக நுழைவாயில் |
| ராஜபாளையம் | தமிழகக் கலாச்சார நகரம் |
| காஞ்சிபுரம் | பாரம்பரியப் பட்டு உலகம் |
| சேலம் | மாம்பழ நகரம் |
| விருதுநகர் | தொழில் நகரம் |
| தூத்துக்குடி | துறைமுக நகரம் |
| ஈரோடு | வாணிபமையம் |
| ஏற்காடு | ஏழைகளின் ஊட்டி |
| கோயம்புத்தூர் | தமிழ்நாட்டின் மான்செஸ்டர் |
| கரூர் | நெசவாளர்களின் வீடு |
| திண்டுக்கல் | பூட்டு நகரம் |

கே.சதீஷ்
இளம் கணிப்பொறியியல் (முதல்)

## எட்டாக்கல்வி



*கோபுரமாய் இருக்கும் கல்வியை*
*எட்டிப்பிடிக்க முயன்று*
*கோபுரத்தின் வாயிற் கதவை*
*அடைந்த – எங்களுக்குக்*
*கோபுரத்தை அடைய முடியவில்லை*
*பணமும், பசியும் தடைக்கற்களாய்*
*அதன் வழியில்...*

ப.பிரவீணா
இளம் இயல்பியல் (நிறை)

S.துரைசாமி & சன்ஸ் ☎ : 222749

**பாத்திரக்கடை**

அலுமினியம், எவர்சில்வர், பித்தளை
பாத்திர வியாபாரம்.
எங்கள் கடையில் அனைத்து வீட்டு
உபயோக பொருட்களும் கிடைக்கும்.

நெ.25, நெ. 2, ரோடு, மயிலாடுதுறை - 1.

Cell : 9894672251 ☎ : 241360

**அமான் பேக் ஒர்க்ஸ்**

ஆர்டரின் பேரில் அனைத்து விதமான
பேக்குகளும் செய்து தரப்படும்.

(ஸ்கூல் பேக், காலேஜ் பேக், டிராவல் பேக், மற்றும்
அனைத்து பேக்குகளும் சர்வீஸ் செய்து தரப்படும்.)

கடை எண். 9 ஹமா சென்டர், 141, பட்டமங்கலத்தெரு
(நகராட்சி மேல்நிலைப்பள்ளி எதிரில்) மயிலாடுதுறை.





# உள்ளாட்சித் தேர்தல்

தமிழகத்தில் உள்ளாட்சித் தேர்தல் விரைவில் நடைபெற உள்ளது. இச்சமயத்தில் தமிழகத்தைப் பற்றிப் பொதுவான ஒரு கண்ணோட்டத்தினைச் செலுத்துவோம்.

தமிழ்நாட்டில் மாநகராட்சிகளின் எண்ணிக்கை 6 (சென்னை, கோவை, திருநெல்வேலி, திருச்சி, சேலம், மதுரை). மொத்த நகராட்சிகளின் எண்ணிக்கை 152. தமிழ்நாட்டிலுள்ள பேரூராட்சிகளின் எண்ணிக்கை 561. மொத்த ஊராட்சிகள் 12,618 ஆகும். இவை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட மொத்தப் பிரதிநிதிகள் அனைவரின் பதவிக்காலமும் தற்சமயம் முடிவுக்கு வருகிறது. இதனால் மீண்டும் உள்ளாட்சித் தேர்தல் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது.

இந்தத் தேர்தலில் புதிய அம்சம் என்னவென்றால் மேயர்கள், நகராட்சித் தலைவர்கள், பேரூராட்சித் தலைவர்கள் போன்ற உறுப்பினர்களைத் தேர்வு செய்யும் புதிய முறை கொண்டுவரப்படுகின்றது. மற்றொரு அம்சம் என்னவென்றால் இந்தத் தேர்தலில் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளதாகும். தமிழ்நாட்டிலுள்ள 6 மாநகராட்சிகளில் 2 மாநகராட்சிகள் பெண்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ளன.

சேலம், மதுரை மாநகராட்சி இதுவரை பொதுவாகத் தான் இருந்தது. இம்முறை இம்மாநகராட்சி பெண்களுக்கென (தனி) ஒதுக்கப்பட்டுள்ளது. மற்றும் மதுரை மாநககராட்சியும் பெண்களுக்கு (பொது) ஒதுக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தகுந்தது. இவை ஒதுக்கப்பட்ட விதம் சென்ற ஆண்டை ஒப்பிடும்போது சுழற்சி முறையில் அமைந்துள்ளது. மற்ற நான்கு மாநகராட்சிகளும் ஆண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள மொத்த நகராட்சிகளில் 51 நகராட்சிகள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. 6 மாநகராட்சிகள், 152 நகராட்சிகள், 12,618 ஊராட்சிகள் என அனைத்திற்கும் தேர்தல் வைக்கப்பட்டு 1,25,000 பிரதிநிதிகள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

அன்புடன் அழைக்கின்றோம் . . .

**ஆப்டிமா** A/C.

**மென்ஸ் பேஷன்**

**CASUALS**
**FORMALS**

***OPTIMA***

**MENS FASHION A/C**

(தீன் பிளாசா & LIC அருகில்)
No.12, O.S.M. நகர்,
மயிலாடுதுறை.







உள்ளாட்சித்தேர்தலை அக்டோபர் 24 ஆம் தேதிக்குள் நடத்தி முடிப்பதற்கான முயற்சியில் மாநிலத் தேர்தல் ஆணையம் இறங்கியுள்ளது. 12.618 ஊராட்சிகளிலிருந்து மொத்தம் 97,485 வார்டு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். 30 மாவட்ட ஊராட்சிகளிலிருந்து 656 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுவார்கள். 561 பேரூராட்சிகளிலிருந்து 8.825 உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுவார்கள்.

இவற்றில் சிற்றூராட்சித் தலைவர், அவற்றின் வார்டு உறுப்பினர்கள் ஆகிய பதவிகளுக்குக் கட்சி சின்னத்தில் போட்டியிட முடியாது. இதன் அனைத்து பணிகளுக்கும் கட்சி சின்னத்தில் போட்டியிடலாம்.

இப்பதவிக்குப் போட்டியிடும் வேட்பாளர்கள் செலுத்த வேண்டிய வைப்புத்தொகை பற்றி மாநிலத் தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிக்கை. . .

| | | |
|---|---|---|
| சிற்றூராட்சி வார்டு உறுப்பினர் | - | 200 ரூ. |
| சிற்றூராட்சித் தலைவர், | | |
| ஊராட்சி ஒன்றிய உறுப்பினர் | - | 600 ரூ. |
| மாவட்ட ஊராட்சி ஒன்றிய உறுப்பினர், | | |
| நகராட்சி உறுப்பினர் | - | 1000 ரூ. |
| பேரூராட்சி - 3 ஆம் நிலை | | |
| நகராட்சி வார்டு உறுப்பினர் | - | 250 ரூ. |
| மாநகராட்சி உறுப்பினர் | - | 2000 ரூ. |

பொது வேட்பாளருக்கான இந்த வைப்புத் தொகையில் பாதியைத் தாழ்த்தப்பட்ட, பழங்குடி சமுதாய வேட்பாளர்கள் கட்டினால் போதும். இத்தேர்தல் பணியில் மாநிலம் முழுவதும் 4 1/2 இலட்சம் ஊழியர்கள் ஈடுபடுத்தப்படுவார்கள். தேர்தலை நடத்துவது தொடர்பான பயிற்சிகள் பல்வேறு கட்டங்களாக அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. தேர்தல் பணிகளைப் பார்வையிட மாவட்டத்திற்கு ஒருவர் வீதம் முப்பது ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள்.

ஆசிரியர் குழு

☎: 242015
Cell : 9443222760

# SHREEM READYMADE

*(Passion For Fashion)*

**Exclusive Men's Fashion ShowRoom**

- Short Shirts
- Short T-Shirts
- Contra Formals
- Boot-cut jeans
- Anti Fit Jeans
- Bermudas
- Night Pants
- Sports Pants
- Gym Shorts
- T-shirts
- Vests
- Briefs
- Formal Wears

GROUP SHIRTS AVAILABLE ON ORDER

**SHREEM READYMADE**

*43/1, Mahadhana Street,*
*Mayiladuthurai - 609 001.*

*Lunch Break : 2 to 4 p.m.*
*Sunday Holiday*







# சுனாமி

சுனாமி என்றால் கடலுக்கடியில் ஏற்படும் பூகம்பத்தாலோ, எரிமலை வெடிப்பினாலோ, விண்கற்கள் கடலில் விழுவதாலோ ஏற்படும் இராட்சச அலைகளே சுனாமி என்று அழைக்கப்படுகிறது.

**டிசம்பர் 26 சுனாமி**

அண்மையில் ஏற்பட்ட சுனாமி இந்தியப் பெருங்கடலிலுள்ள சுமத்ரா தீவின் அருகே உருவான நிலநடுக்கத்தால் ஏற்பட்டதாகும். இத்தீவின் வடக்குப் பகுதியிலிருந்து மேற்கு நோக்கி 160 கி.மீ. தொலைவில் கடலில் ஏற்பட்டுள்ளது.

இந்தியப்பெருங்கடலில் அமைந்துள்ள பூமித்தட்டு வடகிழக்கு நோக்கி நகர்ந்து சுமத்ரா தீவில் அமைந்துள்ள யுரோஷியா தட்டின் கீழ் செருகிக்கொண்டது. இதனால் பிளவுகள் ஏற்பட்டு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்தப் பிளவுகள் கடலுக்கடியில் 1000 கி.மீட்டர் தொலைவில் ஏற்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்தியப் பெருங்கடலில் 1000 கி.மீ. தட்டுக்கிழிந்தாலும், 10 மீ அளவு தட்டு உயர்ந்தாலும் இப்பெரும் நிலநடுக்கம் ஏற்படும்.

தற்போது ஏற்பட்ட நிலநடுக்கத்தின் அளவு ரிக்டர் அளவில் சுமார் 9 ஆகும். இது 1964 ல் அலாஸ்காவில் ஏற்பட்ட 9.2 அளவுக்கு அடுத்தபடியாக உள்ளது. இந்த நூற்றாண்டின் 4 வது பெரிய நிலநடுக்கமாகும். இந்த நிலநடுக்கத்தால் சுமத்ரா தீவு 100 அடி தென்மேற்கில் நகர்ந்துள்ளது.

1983 க்குப் பின் இந்தியப் பெருங்கடலில் ஏற்பட்ட முதல் நிலநடுக்கமாகும். இந்த நிலநடுக்கம் ஹிரோஷிமாவில் போடப்பட்ட 20,000 அணுக்குண்டுகளுக்குச் சமமான ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளது. சுமார் 11 நாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து எங்களுக்கு அதரவு அளித்து வரும் அன்பு வாடிக்கையாளர்கள், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது உங்கள். . . .

# ஜோதி எண்டர்பிரைசஸ்
# & கிப்ட் கார்னர்

அழகிய பரிசுப் பொருட்கள் குழந்தைகளுக்கான விளையாட்டு பொருட்கள் பெண்களுக்கான அழகு சாதனப் பொருட்கள் அனைத்த வகையான வாழ்த்து அட்டைகளின் சங்கமம் உங்கள் . . .

# கிப்ட் கார்னர்



5H, நாராயணபிள்ளை சந்து,
மயிலாடுதுறை.
☎ : 226625





பூமியின் மேற்பகுதி ஏழு பெரிய தட்டுகளாலும் பல சிறிய தட்டுகளாலும் ஆனது.

**ஏழு பெரிய தட்டுகள்**

| | | | |
|---|---|---|---|
| 1. | வடஅமெரிக்கா | 2. | தென்அமெரிக்கா |
| 3. | ஆப்பிரிக்கா | 4. | யுரேசியன் |
| 5. | பசிபிக் | 6. | ஆஸ்திரேலியா |
| 7. | அண்டார்டிகா | | |

ஒன்றோடொன்று நகர்ந்து இடித்துக்கொள்ளும் போதும் இந்த நிலநடுக்கம் ஏற்படுகிறது.

**சுனாமி இதற்கு முன்**

ஜப்பானில் பலமுறை நடந்துள்ளன. இதுவரை 1741 முதல் 1834 வரை 9 முறை நடந்துள்ளன. அதன்பின்னர் 1939 வரை 8 முறை நடந்துள்ளன. இருப்பினும் 100 ஆண்டுகள் வரை சுனாமி ஏற்படாமல் கூட போகலாம்.

**இந்திய அளவில் சுனாமி ஆபத்[illegible]சங்கள்**

நமது கடற்கரையின் நீளம் சுமார் 6000 கி.மீட்டர். இதில்

1. அந்தமான் கடல்
2. இலங்கை தென்கிழக்குப் பகுதிகள் 400- 500 கி.மீ. அருகில்
3. பாகிஸ்தான் கடற்கரையிலிருந்து 70 - 100 கி.மீ. தூரமுள்ள அரபிக் கடல் பகுதி.

இந்தியாவில் கி.மு. 326 -ல் நடந்ததாகத் தகவல் உள்ளது. சிந்துசமவெளி கட்சு கடற்பகுதிகளில் இச்சுனாமி தாக்கிய வரலாறு உள்ளது.

**உயிர்ச் சேத விவரம்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| இந்தோனேஷியா | - | 94, 100 | மாலத்தீவு | - | 75 |
| இலங்கை | - | 30, 196 | மலேசியா | - | 68 |
| தாய்லாந்து | - | 5, 187 | சோமாலியா | - | 176 |
| இந்தியா | - | 9, 571 | தான்சானியா | - | 10 |
| மியான்மர் | - | 90 | கென்யா | - | 1 |

இவ்வாறு இந்தியாவில் மட்டும் 9571 பேர் இறந்தார்கள் என்றும் 5.801 நபர்களைக் காணவில்லை என்றும் தெரிவிக்கிறார்கள். இவ்வாறு சுனாமி பரவி அழித்துவிட்டுச் சென்றுள்ளது.

க வி. மோகன்ராஜ்
இளம் தாவர உயிரியல் (இடை)

## தன்னம்பிக்கை

*நம்பிக்கைக் கொண்டவர்கள்*
*வானில் பறக்கலாம்*
*நதி மேலும் நடைபோடலாம்*
*எம்பிக் குதித்து*
*அந்த நிலவைப் பிடித்து*
*இன்முத்தம் ஒன்று தரலாம்*
*வெம்பி வீழாமலே*
*விதியை வென்று*
*விண்மீனை அள்ளி வரலாம்*
*நம்பு நீ ! நம்பு நீ!*
*நாளை உலகை நாம்*
*வெல்வோம் என்று . . . .*

**பி.கார்த்திக்**
இளம் வேதியல் (முதல்)

### துணுக்குகள்

**இந்தியாவில் உயிருடன் இருக்கும்போதே அஞ்சல் தலையில் இடம்பெறுவது மிகவும் அபூர்வம். இந்த வகையில் முன்னாள் குடியரசு தலைவர் ராதாகிருஷ்ணனும், முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியும், அன்னை தெரஸாவும் தாங்கள் இடம்பெற்ற அஞ்சல்தலைகளைப் பார்க்கும் பாக்கியத்தைப் பெற்றிருந்தனர்.**

**ம.விஜி**
முது வணிகம் (முதல்)

### ஹைக்கூ

*கண்விழித்துச் சேர்த்த*
*செல்வங்களை*
*விடிந்ததும் அள்ளிச்*
*சென்றான்*
*ஆதவன் – பனித்துளி*



**நா.பிரவின்ராஜ்**
இளம் வேதியல் (முதல்)

*எந்நிறம் இருட்டுதான்*
*ஆனால்*
*பலருக்கு வெளிச்சம்*
*தருவேன்*
*கரும்பலகை.*

### காதல்

*நடுவானில் நிலவு*
*அதை உன் நினைவுடன்*
*நான் மட்டும் ரசிக்க*
*நீ ஏனடி மேகத்தில்*
*மறைந்தாய் . . .*



**வை.பன்னீர்செல்வம்**
இளம் மின்னணுவியல் (நிறை)




# Mayura Quality Xerox

- E-MAIL
- XEROX
- DTP
- STD
- ISD
- LAMINATION
- SPIRAL BINDING
- COLOUR XEROX
- PROJECT WORK
- LASER PRINTOUT

RS. 1/-

3, Palanisamy Angadi,
No.2 Road,
Opp.: Sundaram Theatre
Mayiladuthurai.
☎ : 224403
Fax : 223367




### சிந்திப்பீர்! வெல்வீர்!

1. கோள்களில் மிகக் குளிர்ச்சியான கோள் எது?
2. மனிதனால் உருவாக்கப்பட்ட இந்தியாவின் மிகப்பெரிய ஏரி எது?
3. உலகின் மிக நீண்ட சாலை எது?
4. உலகின் முதல் பெண் பிரதமர் யார்?
5. உலகில் தோன்றிய முதல் பல்கலைக்கழகம் எது?
6. இந்தியாவின் முதல் செஸ் சாம்பியன் யார்?
7. ஈரான் நாட்டின் தலைநகர் எது?
8. உலகின் முதல் மினி கம்ப்யூட்டரின் பெயர் என்ன?
9. உலகின் மிகப்பெரிய சைக்கிள் உற்பத்தி நிறுவனம் எது? அது எங்குள்ளது?
10. விம்பிள்டன் டென்னிசில் முதல் இரண்டு சுற்றுகள் விளையாடிய முதல் இந்தியப் பெண் யார்?

திருப்புக ☞

## பரிசுக் கூப்பன்

பெயர் ______________

______________

வகுப்பு ______________

பதிவு எண் ______________

### விடைகள்

1. ______________
2. ______________
3. ______________
4. ______________
5. ______________
6. ______________
7. ______________
8. ______________
9. ______________
10. ______________

## விதிமுறைகள்

இந்தப் பத்து கேள்விகளுக்கும் விடை எழுதிக் கூப்பனைப் பூர்த்தி செய்து இளந்தூது பெட்டியில் சேர்க்கவும்.

ஒன்றுக்கு மேற்பட்டோர் சரியான விடையை எழுதியிருந்தால் குலுக்கல் முறையில் மூவரைத் தேர்ந்தெடுத்துப் பரிசுகள் வழங்கப்படும்.

பத்துக் கேள்விகளுக்கும் சரியான பதில்கள் இல்லையெனினும் அதிகக் கேள்விகளுக்குச் சரியான விடையளிப்பவர்களுக்கு வாய்ப்புத் தரப்படும்.

விடைகள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 1.12.2006

ஆசிரியர் குழுவின் முடிவே இறுதியானது.

ஆசிரியர் குழு



## நவயுக நாயகியே . . .



நவயுக நாயகியே நீ முன்னேற வேண்டுமானால்
மூடநம்பிக்கை எனும் மூடத்தனத்தை
உடைத்தெறிய வேண்டும்
அப்பொழுது நீ மலரென்று வர்ணிக்கப்பட மாட்டாய்
ஒரு சில நிமிடங்களில் உன் திறமை வாடிப்போக!
நீ நிலவு என்று வர்ணிக்கப்பட மாட்டாய்
ஒரு சில நாட்களில் உன் மதிப்பு தேய்ந்துபோக!
நீ பருவங்கள் என்று வர்ணிக்கப்பட மாட்டாய்
ஒரு சில காலங்களில் உன் தைரியம் மாறிப்போக!
நீ ஆறு என்று வர்ணிக்கப்பட மாட்டாய்
ஒரு சில சமயங்களில் உன் ஆற்றல் வற்றிப்போக!
நீ தென்றல் என்று வர்ணிக்கப்பட மாட்டாய்
ஒரு சில நேரங்களில் உன் அடக்கம் புயலாய் மாறிப்போக!
நவயுக நாயகியே! நீ அறியாமை என்னும்
இருளை ஒழித்துக் கட்டி
சூரியனில் நீ ஒளியாக
வர்ணிக்கப்பட வேண்டியவள். . .

ஏ.சரண்யா
முது கணினிப்பயன்பாட்டியல் (முதல்)

## வேட்டை



அதிகாலை எழுந்து அலாரமாய்க் கரைந்து
ஆசையாய்த் (குழந்தையை) தடவி
பசித்த குஞ்சுக்குப்
பசிக்கு உணவு தேடிச் சென்ற பறவையைக்
குறிவைத்துச் சுட்டுக் கும்பிட்டு
எடுத்துச் சென்றான்
தன் குழந்தைக்கு உணவாக. . .

கே.எஸ்.கார்த்திகா
இளம் உயிர்த்தொழில்நுட்பவியல் (இடை)

ஏ வி சி

வண்ணக் கனவுகளால்
கண் நிறையும்
கல்லூரி வாழ்வின்
கவனமற்ற துளிகள் நம்
எண்ண அரண்களை
எரித்து பாலையாக்கும்
அணு ஆயுதங்கள்!
இளையோரே
கண்ணீர் சிந்தி தம்
கரம் சிதைத்து
சிரம் தேய்த்து
கரைந்து கொண்டிருக்கும்
கனிவான பெற்றோரின் கவலை
கண் முன் நிற்கட்டும் அவர்களின்
கனவுகளை நனவாக்க
நற்றமிழ் அன்னையின்
நலம் பேண
நாட்டுப்பண் இசைப்போம்
இதுவே இளையோரின்
இளந்தூதாகட்டும்
வாழ்த்துக்களுடன் ..


அழகிய பரிசு
பொருட்களின்
சங்கமம்
அனைவரும்
வருக!
பயன் பெருக!
பலன் தருக!

**ஜகன் கிறிஸ்தவ**
**இலக்கிய மையம்**

சிவாஜி கணேசன் வணிக வளாகம் (முதல் தளம்)
எண் 16, வண்டிக்காரத்தெரு,
மயிலாடுதுறை - 609 001.






இதழ்

## கண்ணீர் . . .

*நான்கூட இரட்டைக் குழந்தைதான்*
*என்னோடு பிறந்திருக்கிறது வறுமை . . .*
*வளரவில்லை நான்*
*வளர்ந்திருக்கிறது வறுமை . . .*
*கர்ப்பப்பையை க் கிழித்துக் கொண்டு*
*எட்டிப்பார்க்கும் நிலா கூட*
*வறுமையில் தான்*
*தேய்கிறதோ பிறையாக . . . .*
*கரைபடிந்த கைகளைத் தண்ணீரில்*
*கழுவினேன் – கழுவினாலும்*
*கரையவில்லை கரையோடு வறுமை*
*புண்பட்ட கண்ணின்*
*புகைப்படமாய் வறுமை . . .*
*கருவிழியில் கழுவப்பட்டுப்*
*பிரதிபலிக்கிறது கண்ணீர்!*




இரா.வெங்கடேஷ்பிரபு
இளம் உயிர்த்தொழில்நுட்பவியல்
(இடை)


### துணுக்குகள்

ஹென்றி ஃபோர்டு மார்ஷல் டிட்டோ, ரைட் சகோதரர்கள் இருவர். இவர்கள் நால்வரும் எட்டாம் வகுப்பு பரீட்சை எழுத லாயக்கற்றவர்கள் என்று கூறிப் பள்ளியிலிருந்து நீக்கப்பட்டவர்கள். இவர்களை ஊக்குவிக்க எவரும் இல்லை. எல்லாவற்றையும் தாண்டி வெற்றி பெற்றார்கள். நினைத்ததை நடத்திக் காட்ட முன்வருபவர்கள் தான் எப்போதும் வெற்றி பெறுவார்கள்.


பி.திவ்யா
முது வணிகம் (நிறை)

# அமெரிக்க குழந்தையின் ஏவில்லா ஆசை



காதலில் தோல்வி, பரிட்சையில் தோல்வி அடைந்ததால் தற்கொலை செய்து கொண்ட காலம் சென்று, தற்போது விவசாயத்தில் சரிவர வருவாய் ஈட்டமுடியாததால் கடனாளியாக மாறிப் பட்டினியால் தற்கொலை செய்து கொள்வோரின் பட்டியல் நீண்டு கொண்டே போகின்றது.

எல்லாப் பொருட்களுக்கும் உற்பத்தியாளன் விலை நிர்ணயம் செய்த காலம் சென்று, அரசாங்கமே விலையை நிர்ணயம் செய்யும் காலம் தொடங்கி விட்டது. நாடு சுதந்திரம் அடைந்தாலும் அயல் நாடுகளின் ஆதிக்கம் நம்மை ஆட்டிப் படைத்துக் கொண்டு தான் இருக்கின்றன. அமெரிக்க நிறுவனங்கள் சில குளிர்பானங்களில் அளவுக்கு அதிகமாக பூச்சிக்கொல்லி மருந்துகளைக் கலந்து அழிவுக்கு வித்திட்டனர். ஆனாலும், தனது ஆட்டத்தை நிறுத்தாத அமெரிக்க அரசு விவசாயத்திலும் தனது அக்கிரமங்களைப் புகுத்த தயாராகியது.

மான்சாண்டோ என்ற பன்னாட்டு நிறுவனம் Genetically modified seeds / changed seeds என்று சொல்லக் கூடிய மாற்றங்கள் பல செய்யப்பட்ட மரபணு விதைகளை அறிமுகப்படுத்த இருக்கின்றன. ஏற்கனவே இதன் கண்டுபிடிப்பான பி.டி.காட்டன் நஷ்டத்தை ஏற்படுத்தி விவசாயிகளை தற்கொலைக்குள்ளாகியது குறிப்பிடதக்கது.

மேலும், அந்நிறுவனம் விநியோகம் செய்யவிருக்கும் மரபணு விதைகள் நாட்டின் தட்பவெப்பநிலைக்கேற்ப அமைக்கப்பட்டிருப்பதால் நமது சூழலுக்கு இது ஏதுவாக அமையுமா என்பது கேள்விக்குறிதான்.

இதில் விளையும் பொருட்களை நாம் உட்கொள்வதால் நரம்புத் தளர்ச்சி, புற்றுநோய், இருதய நோய், ஆண்மைக் குறைவு, கர்ப்பப்பை கோளாறு, இளம்பிள்ளை வாதம் போன்ற பின் விளைவுகளைச் சந்திக்க வாய்ப்புகள் உள்ளன. இதைக் கருத்தில் கொண்டு உலக நாடுகள் பல இதனைப் புறக்கணித்து விட்டன. இவ்வளவும் தெரிந்த பிறகும் மான்சாண்டோவை விரட்டியடிக்காமல் நம்மவர் கைக்கட்டி நிற்பது ஏன்?

தேசத்தின் பசியைப் போக்கிவிட்டு தான் பட்டினியால் தற்கொலை மேற்கொள்ளும் இந்த அழிவின் ஆரம்பத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பது யார்?

**க.குழலினி**
முது நுண்ணுயிரியல் (நிறை)





# நம்பிக்கை. . .

*தோற்றுத் தோற்றுப் பழகிப்போன எனக்கு
தோல்வியே தொடர்ந்து வந்தது . . .
தோல்விகள் தொடர்வண்டியாய் என்னைத் தொட்டபோது
நான் விழவில்லை . . . .
தோல்வியையும் தோற்கடிக்க விரும்பினேன்
நான் தோற்கடிக்க விரும்பிய தோல்வி கூட
என்னைத் தோல்வியுறச் செய்தது . . .
தோல்வி என்ற மூன்றெழுத்தை மறைக்க
வெற்றி என்ற மூன்றெழுத்தைப் படைக்கப் பார்த்தேன்
தோல்விதான் மீண்டும் என்னால் படைக்கப்பட்டது
தோல்வி கூடத் துவண்டு போகாமல் என்னைத்
தோல்வியுறச் செய்ததை எண்ணி மகிழ்ந்தேன் . . . .
தோல்வியின் விடா முயற்சியினை நினைந்தேன் . . . .
தோல்வியைத் தோற்கடிக்க வேண்டிய என் முயற்சியில்
நான் வெற்றியைத் தோல்வியுறச் செய்து கொண்டேன் .
என்றாவது என் வெற்றியும் வெற்றி பெறும்
அப்போது தோல்வியை, என் வெற்றி தோல்வியுறச் செய்யும்
அதுவரையில் என் வெற்றியை இந்தத் தோல்வி
தோல்வியுறச் செய்யட்டும். . .
தோல்வியின் தழும்புகளில் என் வெற்றியோ
நிற்கின்றது விளிம்புகளில். . . .
வெற்றியின் தழும்பில் ஒரு நாள்
தோல்வியை விளிம்பாய் மாற்றுவேன்
என்ற என் எண்ணம் தோல்வியுற்றாலும்
என் நம்பிக்கை அதனை ஒரு நாள் வெல்லும்
அப்போது அந்தத் தோல்வி
அதன் தோல்வியை எண்ணித்
தொலைந்து போய்விடும் . . .
தோல்வியைத் தோற்கடித்த மகிழ்ச்சியில்
என் வெற்றி நிலைத்துவிடும். . .*



**அ. இன்னாசிப்பாண்டியன்**
இளம் விலங்கியல் (இடை)

# இளந்தூதுவிற்கு பிரபலங்களின் தூதுக்கள் . . .

[illegible]

உவமைக் கவிஞர்
சுரதா

இளந்தூது பத்திரிகையின் 13ம் ஆண்டு விழா [illegible]
[illegible] 'இளந்தூது' [illegible]
வாழ்க! வாழ்க! [illegible]

(VISU)

விசு

[illegible]

[புதுவை முதல்வர்]

புதுவை முதல்வர்
ரங்கசாமி

[illegible]

தென்கச்சி
கோ. சுவாமிநாதன்

அன்புள்ளவர்களுக்கு

வணக்கம்.

'இளந்தூது' 15 ஆம் ஆண்டு விழா என்ன
பாப்பா பதினைந்து ஆண்டு விழாக்களைக்
காணப் பல்லாயிரம் வாழ்த்துகள்.

அன்புடன்
சாலமன்

சாலமன் பாப்பையா

இளைஞர்கள் நெஞ்சம்
இளந்தூது இதழ்
நித்தம் பெறவும்,
இனிய தமிழ்க் கொள்கைக்கு
நேர் வழியில் பயணப்படவும்
என் இனிய வாழ்த்துகள்!

தோழமையுடன்,
சுப. வீரபாண்டியன்
14-09-04

சுப. வீரபாண்டியன்

ஓ
வி
சி

## மெய்

கவிதைக்குப் பொய் அழகு
அதனால்தான் என்னவோ
என்னால் உன்னைப் பற்றி
ஒரு கவிதைத் தொடரைக்கூட
தொடுக்க முடியவில்லை. . .



ப.த.தீபன்சக்கரவர்த்தி
முத கணினிப்பயன்பாட்டியல் (நிறை)



## கலாம்

இளமையில் சிந்திக்' கலாம்
சிந்தித்தால்
வாழ்வில் நீ சாதிக்' கலாம்
சாதித்தால்
நீ அப்துல்' கலாம்
ஆ' கலாம்

எஸ்.வெற்றிச்செல்வி
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

## தேசியக்கொடி

மறந்து போய் இறக்காமல்
விட்டுவிட்ட – தேசியக்கொடி
இரவில் இப்படியும்
நினைக்கலாம்
பகலாய் இருந்தும்
பயனில்லை
சாதிவெறியர்கள்
இருக்கும் உலகில்
இரவிலாவது பறப்போம்
நிம்மதியாய்!



தங்க.சரவணன்
இளம் தாவரவியல் (நிறை)





இ
த
ழ்

# இடி, மின்னல், மேகம்

அடர்த்தியான மரங்கள் இருந்தால் அதன் சுற்றுப்புறம் வெப்பம் குறைந்திருக்கும். ஈரம் அதிகமிருக்கும். இதுதான் வான் மண்டலத்தின் காற்றழுத்தத்தைப் பாதித்து. ஆவியாகி விட்ட நீர் மறுபடியும் நீர்த்துளியாகி மழைபெய்ய உதவும். மழை நிறையப் பெய்தால் மரங்கள் நிறைய . . . . மரங்கள் நிறைய இருந்தால். . . மழை நிறைய . . . இஃது ஒரு குட்டிச் சக்கரம். நீலகிரி பிரதேசத்தில் மர அடர்த்தி 47 லிருந்து 36 விழுக்காடு குறைந்திருக்கிறது. அந்தப் பகுதியில் மழையும் குறைந்துவிட்டது. பழநி மலையில் மர அடர்த்தியுள்ள இடத்தில் மழைபெய்யும் அளவுக்கு அருகே ஒரு கி.மீ தூரத்தில் இருக்கும் சமவெளியிலும் மழை இல்லை.

**மின்னல்களில் மூன்று வகை உண்டு.**

1. மேகத்துக்கு மேகம் தாவும் வகை.
2. மேகத்திலிருந்து பூமிக்கு எம்பும் வகை.
3. பரிசோதனைச் சாலையில் கண்ணாடிப் பெட்டிக்குள் விஞ்ஞானிகள் உண்டாக்கும் மினி மின்னல்.

**இடி**

இடி என்பது மேகங்களில் சேர்ந்திருக்கும் ஆயிரக்கணக்கான கிலோ வோல்ட் மின்சக்தி பூமியில் உயரமான பொருளுடன் ஸ்பார்க் அடிக்கும் போது பாயும் மின்சாரம் தான் இடி. பச்சை மரத்தை எரிக்கும்.

கூர்ந்து கவனித்தால் இடியும், மின்னலும் ஓரே நேரத்தில் தான் ஏற்படுகிறது எனத் தெரியும். ஒளியின் வேகம் ஒலியை விட அதிகம் என்பதால் மின்னல் இடிக்கும் முன்பே கண்ணில் புலப்படும். சற்று நேரம் கழித்தே இடியொலி கேட்கும்.

காலிபிளவரைப்போல மேகங்களை அடிக்கடி பார்த்திருப்பீர்களே அவற்றைக் க்யூமூலஸ் என்பார்கள். அதிலேயே உயரமாகக் கறுப்பாக இருந்தால் அது க்யூமூலோ டும்பஸ். தட்டையாகக் கிட்டத்தில் தெரியும் மேகங்கள் ஸ்ட்ரேட்டஸ். மிக உயரத்தில் சிறடிக்குமே அது சீர்ரஸ் எனப்படும். இன்னும் எத்தனை எத்தனை வான உலகில் இருக்கின்றதோ . . .

ந.சுபத்ரா
இளம் இயல்பியல் (இடை)

## மனிதனே கேள் . . .



காலத்தின் பிடியில் வாழும்
மனிதனே கேள்!
காலத்தை எதிர்கொள்
கனவுகள் நனவாகும்!
நேரம் போகவில்லை என்று கூறும்
மனிதனே கேள்!
உழைத்துப் பார்
நேரம் போதவில்லை என்பாய்!
போட்டிகளில் வெற்றி கிட்டவில்லை
என்று கூறும் மனிதனே கேள்!
தொடர்ந்து மோதிப்பார்
தோல்விகளும் வெற்றியாய்
மாறியது என்பாய்!
வாழ்வில் மகிழ்ச்சியே இல்லை
என்று கூறும் மனிதனே கேள்!
சகிப்புத் தன்மையை வளர்த்துப்பார்
மகிழ்ச்சி உன்னை நாடி வந்தது என்பாய்!

ஜெ.சாந்தி
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

## தோழி



மணிக்கணக்கில் பேசினாலும்
மனத்தினுள் ஏதோ வறட்சி. . .
பெருமழையில் நனையாத
குடையின் உள் பக்கம் போல் . . .
தோழி! நாம் பிரியும் நாளை
உணர்ந்து. . ..

இரா.பாலாஜி
முது வேதியியல் (முதல்)





# கல்லூரி மாணவர் பேரவை



கல்லூரி ஆண்டில் 2006 – 07 புதிதாய்ப் பொறுப்பேற்றுள்ள நம் கல்லூரி மாணவர் பேரவைப் பொறுப்பாளர்களுக்கும், ஏனைய மாணவர் சேவை அமைப்புப் பொறுப்பாளர்களுக்கும் இளந்தூது தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

ஏவிசி

# அநாதையின் சொந்தக்காரி

கதை சொல்லிச் சோறூட்ட
கதையில்லை...
நிலவுயிருக்கு
சோறுயிருக்கு
என்றும் சேராது
நிலாச்சோறாக...
அங்கே இதமாய்
வாழ்க்கை நடக்கிறது
இங்கே ஒருவிதமாய்
வாழ்க்கை நடக்கிறது
சோகக் கதைகள்
வேண்டுமா?
பெற்றுக் கொள்ளுங்கள்
இலவசமாக...

நான் அநாதை ஜாதி என்றால்
அன்பு நெஞ்சங்கள் என்
கடவுள்
கசக்கும் கண்ணீரில்
கனிகிறது வாழ்க்கை
நிலவில் ஒரு
சொந்தக்காரி இருக்கிறாள்
தனிமையில் என்னைப்போலவே
மௌனம் விற்று
கனவு வாங்கும் கண்களுக்கு
எல்லா நாளும் அமாவாசையாய்
அப்பாட்டியும்
இறந்து விட்டாள் போலும்...

பா.மு.பாலமுரளி
இளம் உயிர்த்தொழில்நுட்பவியல் (இடை)



# நியாயமா?

இளைஞனே என்ன செய்தாய்?
பத்துமாதம் கருவறையில் சுமந்த
தாய்க்கு என்ன செய்தாய்?
இன்று வரை நெஞ்சினிலே சுமக்கும்
உன் தந்தைக்கு என்ன செய்தாய்?
வாழ்நாள் வரை
தன் மடியிலே தாங்கும்
தாய்நாட்டிற்கு என்ன செய்தாய்?
சென்றவிடமெல்லாம் உன்னைக்
காப்பாற்றும் தாய் மொழிக்கு
என்ன செய்தாய்?
இது வரை எதையுமே செய்ய த்
துணியாத உன் மனம்
காதலுக்காக உயிரைத் தியாகம்
செய்வது நியாயமா...?

டி.கோகிலா
முது விலங்கியல் (நிறை)





இதழ்

டயலாமோ... டயலாமோ... என்று ஆசியின் செல் போன் மணி ஒலித்தது. ஆசி ஹலோ யார் பேசறது என்றான். டேய் நான் தான்டா இளன் பேசறேன் என்றான். ஆசியை நலம் விசாரித்தான். டேய் ஆசி நாளை காலை 8.00 மணிக்குப் பேருந்து நிலையத்திற்கு வந்துடு என்றான் இளன். இருவரும் பஸ்ஸ்டாண்டில் மறுநாள் சந்தித்தனர். இருவர் கண்களையும் யாரோ மூடினர். யாரென்று திரும்பிப் பார்த்தால் வாசி நின்றான். வாடா வாசி நல்லாயிருக்கியா? என்று இளனும், ஆசியும் நலம் விசாரித்தனர்.

# இளன்.. ஆசி.. வாசி..

கல்லூரிப் பேருந்துகள் அனைத்துமே செம கூட்டமா இருந்துச்சி. இருந்தாலும், பரவாயில்லை என்று மூவரும் பேருந்தில் ஏறிக் கல்லூரி சென்றடைந்தனர். டேய் வாசி காலேஜ் கிரௌண்டைப் பார்த்தாய? எவ்வளவு சூப்பரா எல்லா இடமும் எவ்வளவு அழகா இருக்குல. டென்னிஸ் இடம், கபடி இடம், பேட் மிட்டன் இடம், அப்புறம் பேஸ்கட் பால் இடம் இப்ப புதுசா கட்டுறாங்க. ரொம்ப ரொம்ப அழகா இருக்குடா என்றான் இளன்.

மூவரும் வெள்ளி விழா வாயிலின் அருகில் சென்றனர். அங்க பாருடா ஆர்கனிசேஷன் போர்டெல்லாம் எவ்வளவு சூப்பரா வரிசையாய் வச்சிருக்காங்க. பாருடா என்றான் வாசி. ஆமான்டா ரொம்ப சூப்பரா இருக்குடா என்றான் ஆசி. அதோ பாருடா மாணவர் வெயிட்டிங் ஹால். இனிமேல் கவலையே இல்லைடா. லேட்டா வந்தா கூட அங்கபோய் உட்கார்ந்திருக்கலாம்டா என்றான் இளன். ஆமான்டா, ஆமான்டா என்றான் வாசி. டேய் ஆசி, மரத்தெல்லாம் பாருடா ஒவ்வொரு மரத்துக்கும் அதன் அறிவியல் பெயருடன் பெயர்ப்பலகை அடித்துள்ளார்கள். மரத்தோட அறிவியல் பெயர்கள் எனக்கு இப்பதான்டா தெரியுது என்றான் இளன்.

நம்ம கல்லூரியில பார்த்தாயா? டூவீலர் லைசென்ஸ் எல்லாம் குறைஞ்ச செலவுல எடுத்துக் கொடுத்திருக்காங்க. அது ரொம்ப உதவியா இருக்குடா. டூவீலர் லைசென்ஸ் எடுத்துக் கொடுத்தது எல்லா மாணவர்களுக்குமே ரொம் சந்தோஷமா இருக்குடா என்றான் ஆசி.

ஏ
வி
சி



# M.M. பேன்சி வேல்ட்

## & கூல்டிரிங்க்ஸ்



புஷ்பா காம்ப்ளக்ஸ்,
மதனா மருத்துவமனை எதிரில்.
மயிலாடுதுறை. Cell : 9443193313

புத்தம் புது டிசைன்களில் தரமான பேன்ஸி வளையல், தோடு, கிளிப் மற்றும் கவரிங் நகைகள் அழகு சாதனப் பொருட்களும் இதனுடன் அனைத்து வகையான குளிர்பானங்களும் கிடைக்கும்.

குறிப்பு : சுபநிகழ்ச்சிகளுக்கான தலைசெட் வாடகைக்கு கிடைக்கும்.

LG Carrier

Ph : 04364 - 227133
Cell : 94431 - 87562

*Authorised Airconditioner Dealer*

•Sales •Service •Spares

# SIVA SAKTHI AGENCY

34 A/5, Co-operative Urban Bank Lane,
Pattamangala Street,
Mayiladuthurai - 609 001.





அதற்காக அதிக முயற்சி செய்த நமது கல்லூரி முதல்வர் மு.வரதராசன் அவர்களுக்கு ரொம்ப நன்றியைத் தெரிவிக்கனும்டா என்றான் ஆசி. டேய் ஆசி, நம்ம கல்லூரிக்கு 5 ஸ்டார் தரப் போறாங்களாமே என்றான் வாசி. ஆமான்டா என்றான் ஆசி. சமீபத்துல கூட தரநிர்ணயக்குழு வந்து பார்த்துட்டு நம்ம கல்லூரிப் பற்றி பெருமையா சொல்லியிருக்காங்கடா. கண்டிப்பா நம்ம கல்லூரி 5 ஸ்டாருக்கு சமமான தரம் கிடைச்சிடும்டா என்றான் இளன்.

தரநிர்ணயக்குழு வந்துட்டு போனதிலிருந்து கல்லூரியே சூப்பரா இருக்குடா என்றான் ஆசி. கொஞ்ச நாளைக்கு முன்னாடி வேலாயுதம் ஹால்ல பார்த்தியாடா? சென்னையிலிருந்து வந்து நமக்காக இண்டர்வியூ எப்படியெல்லாம் அட்டன் பண்ணலாம், அதற்கு எப்படித் தயாராக வேண்டும் எப்படியெல்லாம் நடந்துகொள்ள வேண்டும். என்று சூப்பரா பேராசிரியர் சௌந்தர்ராஜன் விளக்கமா சொன்னாங்கடா. ரொம்பவும் யூஸ்புல்லா இருந்துச்சிடா என்றான் இளன். ஆமான்டா நானும் பார்த்தேன்டா என்றான் வாசி.

டேய் வாசி நம்ம எக்ஸ்னோரா மாணவர்களைப் பாருடா எவ்வளவு சூப்பரா ஒவ்வொரு கிளாஸ் ரூமிலும் குப்பைக் கூடை வச்சிருக்காங்க. இப்பவெல்லாம் ஒரு கிளாஸ்லகூட குப்பையே பார்க்க முடியலைடா என்றான் ஆசி. அதுமட்டுமில்லடா அந்தக் குப்பையெல்லாம் வாரத்திற்கு ஒரு முறை சுத்தம் பன்றாங்கடா என்றான் இளன். சரிடா நம்ம கல்லூரியில் ஏதோ ஒரு மாணவி பேச்சுப் போட்டியில முதலாவதாக வந்திருக்காமே. அப்படியாடா? என்றான் வாசி. ஆமான்டா கலைஞர் அறக்கட்டளை சார்பில் மாவட்ட அளவில் நடத்திய பேச்சிப்போட்டியில நம் கல்லூரியின் முது கணிதத்துறை முதுகலை மாணவி முதலிடம் எடுத்திருக்காங்கடா, இது நம்ம கல்லூரிக்கே பெருமையா இருக்குடா என்றான் ஆசி.

டேய் இளன், அங்கப்பாருடா ஒவ்வொரு துறைக்கும் போறதுக்கு வழிக் காட்டிப்பலகை வச்சிருக்காங்க பாருடா என்றான் வாசி. ஆமான்டா கல்லூரிப்பற்றி எதுவுமே தெரியாதவங்க கூட எளிமையாய் எங்கப் போகணுமோ அங்கப் போறாப்பல ஈஸியா வழி காட்டுறாப்பல இருக்குடா என்றான் ஆசி. சரி வாடா கேண்டீனுக்குப் போய் வரலாம் என்று இளன் கூப்பிட்டான். கேண்டீனுக்குச் செல்லும் வழியில், அங்கப்பாருடா ஹெர்பல் தோட்டத்தை, சூப்பரா இருக்குடா ரொம்ப ரொம்ப அழகா இருக்குடா என்றான் வாசி.

ஏ
வி
சி

☎ : 04364 : 229651

# STUDENTS XEROX

## MAYILADUTHURAI

*Xerox * DTP * Word Processing
* Laser Printing * Lamination
* Electronic Typing * CD Writing
* All Types of Binding

**MULTI COLOUR XEROX & PRINTING,
12X18 BOARD PRINT, A4, A3, FLS BOARD,
A4 HP, COLOUR PRINT &
COLOUR XEROX AVAILABLE**

*Specialist in :*

***STUDENTS PROJECT REPORT & THESIS WORK WITH CONCESSIONAL RATE***

Laser printing RS. 2/- (only)

**மாணவர் நகலகம்**

நெ. 6, கிட்டப்பா நகராட்சி அங்காடி,
மயிலாடுதுறை - 609 001.





ஆமான்டா. எல்லாச் செடிகளுமே மூலிகைச் செடிடா என்றான் ஆசி. மூவரும் கேண்டீனுக்குச் சென்றனர். கேண்டீனைப் பார்த்ததும் வாசி வியந்து போனான். டேய் இளன் நம்ம கேண்டீனைப் பாருடா எவ்வளவு சூப்பரா இருக்கு பாருடா. கேண்டீன் பார்க்கறதுக்கே ரொம்ப அழகா இருக்குடா. இனிமேல் வெளியில் போகவே வேண்டாண்டா. நம்ம கேண்டீனிலே எல்லாப் பொருளும் இருக்குடா என்றான் இளன். ஆமாண்டா. கேண்டீனை இந்த வருடம் புதுப்பிச்சியிருக்காங்கடா என்றான் ஆசி.

டேய் இளன், இதுமட்டுமில்லடா நம்ம கிரௌண்டுல இருக்கிற தெட்சிணாமூர்த்தி கோயிலின் வேலையும் சூப்பரா நடக்குதுடா என்றான் ஆசி. டேய் வாசி, உனக்கு இன்னொரு செய்தி தெரியுமா? என்றான் இளன். உடனே அதுஎன்னடா செய்தி என்றான் வாசி. ஆமாம். முன்பெல்லாம் தண்ணீர் குடிக்க கேண்டீனுக்குத் தான்டா போகனும். ஆனா இப்பவெல்லாம் கிளாஸ்க்கு வெளியிலேயே தண்ணீர் இருக்குடா என்றான் இளன். ஆமான்டா இளன் எங்க வகுப்புலயும் இருக்குடா , வெளியில போற அவசியமே இல்லடா என்றான் வாசி.

ஆமாண்டா ஆசி. என்.எஸ்.எஸ். பணி இப்ப என்னடா செஞ்சாங்க? என்றான் வாசி. என்னடா வாசி, இப்படி கேட்டுட்ட வாராவாரம் நம்ம கல்லூரி உள்ளேயே சூப்பரா சுத்தம் செய்றாங்கடா. அதனாலதான் கல்லூரியே பளிச்சின்னு இருக்குடா என்றான் ஆசி.

அதுமட்டுமில்லடா என்.சி.சி. மாணவர்கள் தஞ்சாவூர் போய்க் கேம்ப் அட்டன் பண்ணி நம்ம கல்லூரியோட பெருமையை நிலைநாட்டி இருக்காங்கடா என்றான் இளன்.

இப்படிப் பேசிக் கொள்ளும் போதே டேய் நேரத்தைப் பாருடா என்றான் வாசி. ஆமான்டா வெகுநேரம் ஆயிடுச்சி. நேரத்தோட வீட்டுக்குப் போவோம் வாங்கடா என்றான் ஆசி. மூவரும் கல்லூரியை விட்டு வீட்டுக்குத் திரும்பினர்.

ஆசிரியர் குழு

ஆ
த
ழ

M.Prakash Cell : 9443578398

COMPLETE PERSONALITY
FOR A COMPLETE MAN

**mathi's**

MENSWEAR

6-C, Narayana Pillai Lane,
(Opp. Hotel Dayalan)
Mayiladuthurai - 609 001.

Cell : 9443578398

**New Fashion**

*Gift Shop*

(Opp. Hotel Dayalan) 6-E, Narayana Pillai Street,
Mayiladuthurai - 609 001.







## காதல்

*கண்கள் செய்யும்*
*சிறு தவறுக்கு*
*இதயம் அனுபவிக்கும்*
*ஆயுள் தண்டனை –*
*காதல்!*

**ஆர்.வினோத்**
இளம் வரலாறு (நிறை)

## ஏற்றத்தாழ்வு . .

*பண்ணையாரின் பயிர்*
*தண்ணீருடன்*
*தலைநிமிர்ந்தது. . .!*
*கூலி விவசாயியின்*
*குறுநிலப்பயிர்*
*வாடித் தலைகுனிந்தது. . .!*

**மு.முரளி**
இளம் வேதியல் (நிறை)



## பிப்ரவரி. . .

*ஆங்கிலத்தாய்ப்*
*பெற்றெடுத்த*
*குறைமாதக்*
*குழந்தை. . .*

**கி.லெக்ஷ்மி**
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

## துணுக்குகள்

நான்காயிரம் வகை ரசாயணப் பொருட்களைக் கொண்டது சிகரெட். அதில் நாற்பது வகை இரசாயணம் புற்று நோயை உண்டாக்கக் கூடியவை.

முதன்முதலில் தேசிய கீதத்தை உருவாக்கிய நாடு ஜப்பான்.

**சுப.சுதா**
முது நுண்ணுயிரியல் (முதல்)

## ஹைக்கூ . .

*மாடுகூட அம்மா*
*தமிழன் தான் மம்மி*
*அய்ந்திலும் தாழ்வு ஆறு*



*வானத்திலும்*
*வேலை நிறுத்தமா ?*
*அம்மாவாசை . . .*

**எஸ்.அருள்தேவி**
இளம் வணிகம் (நிறை)

P.MANOHARAN & BROS
Proprietor

ESTED : 1951
Contact
☎: 223232

NEW PHOTO DIGITAL STUDIO
WE CHANGE LIVES

143. No.2 Road, Mayiladuthurai.

SHOOT YOUR SNAPS @ MODEST PRICES
YOU WILL NEVER NEED A MIRROR



Head Office Ph : 293412

Sri Balaji
Opticals A/c

Computer Eye Testing •
Power Lens Manufacturer •

25, Pushpa Complex, (Opp. : Deen Plaza)
State Bank Road, Mayiladuthurai - 609 001.

Branch : No.1, Hathoon Residency (Near Arun Priya Hospital)
Pattamangala Street, Mayiladuthurai.





## கனவு



இதுவரையில் காணாத நந்தவனம்
பூக்களோ வரவேற்று நின்றன
மயில்கள் தோகைவிரித்து
ஆடிக்கொண்டிருந்தன
அதை அழகாய்
ரசித்துக்கொண்டிருந்தேன்
குயில்கள் இனிமையாய்ப்
பாடிக் கொண்டிருந்தன
அதை இன்பமாய்
ரசித்துக் கொண்டிருந்தேன்
கார்மேகங்கள் கூட்டமாய்ப்
பிணைந்திருந்தன
அதை இன்பமாய்
ரசித்துக் கொண்டிருந்தேன்
சில்லென்ற இளந்தென்றல்
பூக்களை அசைக்க பார்த்திருந்தேன்
மழை வரப்போகும் நேரம்
விழுந்தன நீர்த்துளிகள் என் முகத்தில்
நீரின் சுவையிலோ குறை
அதென்ன ஒரு குரல்
அடிக்கடி கேட்கும் குரல்
தூங்கியது போதும்
எழுந்திரு . . ... . ... . அம்மா!

க.கண்மணி
இளம் வேதியல் (நிறை)

## ஹைக்கூ

கல்லூரி
மாணவர்களின்
சாதனை
பேருந்து படிக்கட்டில்
தொங்கும்போது
மட்டும் . . .



எம்.மதிவாணன்
இளம் வேதியல் (இடை)




# டெய்சி டெய்லர்ஸ்

9/10, அவையாம்பாள்புரம்,
LIC எதிரில், மயிலாடுதுறை.
☎ : 240169 Cell : 9865313487

எங்களிடம் ஜமிக்கி, சந்தோஷி எம்ப்ராய்டரி குந்தன் வேளை மற்றும் சுடிதார் ஜாக்கெட்டுகள் அனைத்து டிசைன்களில் குறித்த நேரத்தில் சிறந்த முறையில் தைத்து கொடுக்கிறோம்.

# ESSAR XEROX

For Quality Xerox, Typing,
Electronic Typing, Lamination & DTP

# ESSAR TRAVELS


Passport, VISA & Ticketing

28/2, Town Extension,
Mayiladuthurai - 609 001.
Ph : 222454





# எதிர்காலம்.



*இளைஞனே – நீ வேலையில்லாததால்*
*வெறுக்கப்பட்டாய் – உறவுகளால்*
*வெறுப்படைந்தாய் – உன் நிலைகண்டு*
*நிலைகுலைந்து நிற்கும் – உலகின் பிழைகண்டு*
*நுண்கிருமிகளாய் இருக்கும் அரசியல் நிலைகண்டு*
*சாதி மதங்களால் உருண்டோடும் தலைகண்டு*
*அழிந்து வரும் – உன்நாட்டுப் பாரம்பரிய கலைகண்டு*
*அஞ்சினாய் . . . மாறச்சொல்லிக் கெஞ்சினாய்*
*இறுதியில் செல்லறித்துப் போனாய்*
*பொறுத்தது போதுமென்று – உன்*
*நாட்டு மக்களின் கண்ணீர் துடைக்க*
*அனல் பறக்கும் கொள்கையோடு*
*நிலத்தைப் பிளந்து கொண்டு*
*புதுப்பிறவி எடுத்தாயோ*
*இருண்டு கிடக்கும் எங்களின்*
*எதிர்கால வானம் – உன்னால்*
*ஒளிபெறட்டும் இனி நிச்சயம்*
*நாங்கள் காணப்போவது*
*ஒளிரும் இந்தியாவே . . !*

**ஜெ.ருபாவதி**
இளம் நுண்ணுயிரியல் (இடை)

# HASAN'S A/c

## Gift & Travels

37A, Kadiriya Complex, State Bank Road,
MAYILADUTHURAI. Cell : 9443726701

எல்லா விசேஷங்களுக்கும் வழங்கக் கூடிய பரிசு பொருட்கள், வாழ்த்து அட்டைகள், பீங்கான் தட்டை, கோப்பைகள், கண்ணாடி தட்டைகள், குவளைகள், குழந்தைகளுக்கு தேவையான விளையாட்டு சாமான்கள், வாசனை திரவியங்கள், பெண்களுக்கு தேவையான அழகு சாதனங்கள், சி.டி. கேசட்டுகள் மற்றும் வெளிநாட்டு டெலிபோன்கள் கிடைக்கும்.

# TEMPO TRAVELLER A/c

புஷ்பேக் சீட்கலர், சி.டி. வீடியோ, டிஜிட்டல் MP3 ஆடியோ ஏர்கண்டிஷன் கோச், இருக்கைகளுக்கு மேலே ஏர்கண்டிசன் வசதியுள்ள சொகுசு உல்லாச வாகனம் வாடகைக்கு கிடைக்கும்.

37A, Kadiriya Complex, State Bank Road,
MAYILADUTHURAI.
Off : 226701, Cell : 9443726701






## நானும் வேலைக்குப் போகிறேன் ...

கழனிக்காட்டை விற்றுக் கல்லூரி வரை
படிக்கவைத்தனர் – என் பெற்றோர்
நான் வேலைக்குப் போவேனென்று
நானும் வேலைக்குச் செல்கிறேன்
என் பெற்றோரோடு
எனக்காக விற்ற
கழனிக் காட்டிற்குக்
கூலி வேலைக்கு ...!



கெ.முருகன்
முது கணிதம் (நிறை)

### துணுக்குகள்

உலகின் மிகப்பெரிய குகை எங்குள்ளது?
பிரான்சில் உள்ள குகை. 5 ஆயிரத்து 36 அடி ஆழமுள்ளது.

நாணயங்களை அறிமுகப்படுத்தியவர்கள் யார்?
கிரேக்கர்கள்.

வி.சத்தியா
இளம் கணிதம் (இடை)

### ஹைக்கூ

மக்களைப் பாதுகாக்கும்
மகேசனுக்குப்
போலீஸ் பாதுகாப்பு
திருவிழாவில்

அ.வினோத்
இளம் வணிகமேலாண்மை (நிறை)



### ஏழை

வீடு நிறைய
வெள்ளிக்காசுகள்
வயிற்றுப் பசியுடன்
அண்ணார்ந்து
பார்க்கிறான்
செல்அரித்த
கூரையை ...

க.கிருஷ்ணப்பா
முது விலங்கியல் (நிறை)

# முகவரி . . .

## ஃபேஷன் டெக்னாலஜி

இன்றைய நிலையில் ஃபேஷன் டெக்னாலஜிக்கு உலக நாடுகளிலேயே நல்ல வரவேற்பு இருக்கிறது. ஃபேஷன் டெக்னாலஜி மூலம் ஒரு நாட்டின் கலாச்சாரம், நாகரிகம், வியாபார முன்னேற்றம், தொழில்நுட்பம் என்று அனைத்தும் வெளிப்படுகிறது. இஃது ஒரு நுண்கலை போன்றது. குறிப்பாக அக்கால மாணவர்களின் எண்ணங்களைத் திரையிட்டுக் காட்ட வாய்ப்புத் தருகிறது. இக்கால மாணவர்களுக்குத் தங்களுடைய தொழில்நுட்பத்திறனை வெளிக்காட்ட உதவும் ஒரு படிப்பு தான் ஃபேஷன் டெக்னாலஜி.

இதில் ஃபேஷன் டிசைனிங் என்பது ஃபேஷன் டெக்னாலஜியில் முக்கியமானதாகக் கருதப்படுகிறது. அஃதாவது, நான் உருவாக்கும் பொருளினுடைய அமைப்பு மற்றும் வேலைப்பாடுகளைச் செய்தல. அது ஆடைகளாகவோ, காலணிகளாகவோ, ஆபரணங்களாகவோ மற்றப் பொருட்களாகவோ இருக்கலாம். ஒவ்வொன்றுக்கும் தனியாக படிப்புகளும், பயிற்சிகளும் உள்ளன.

**தகுதி**

இளநிலைப் பட்டப்படிப்பிற்கு 10 ஆவது அல்லது +2 படித்து 50% மதிப்பெண்கள் வைத்திருந்தால் போதும். முதுநிலை படிப்பிற்கு இளநிலைப் பட்டம் வேண்டும்.

**வேலைமிடங்கள்**

படித்து முடித்தவுடன் கார்மெண்ட்ஸ், தோல் தொழிற்சாலை, நகைக்கடை போன்ற இடங்களில் (Merchandising Industry) ஃபேஷன் வடிவமைப்பாளராகவும், ஃபேஷன் ஒருங்கிணைப்பாளராகவும், விரிவுரையாளராகவும் வேலைகள் கிடைக்கின்றன.





இப்படிப்பிற்கு எழுத்துத்தேர்வு மூலமாகவும், தொழில்நிலைத் தேர்வு மூலமாகவும் குழுவிவாதம் மற்றும் நேர்முகத் தேர்வின் மூலமாகவும் மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர்.

படிப்புகள்

இளநிலை, முதுநிலை, டிப்ளமோ மற்றும் சான்றிதழ் படிப்புகள்
அக்ஸசஸ்ஸரி டிசைனிங் மற்றும் ஃபேஷன் டிசைனிங்
நெசவு உற்பத்தி தொழில்நுட்பம்.
ஆடைவிற்பனை மற்றும் வாணிபம்.
தோல் மற்றும் ஆடை வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம்.
ஃபேஷன் ஜெனலிசம் மற்றும் பிரசன்டேஷன்
பின்னல் வேலைப்பொருளின் வடிவமைப்பு மற்றும் தொழில்நுட்பம்.
ஆடை வடிவமைப்பு மற்றும் வளர்ச்சி.

இப்படிப்புகளுக்கு ஏற்றப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. இந்தப் பயிற்சிகள் மாணவர்கள் உலகச் சந்தையில், பங்களிக்கவும், போட்டியிடவும் தயாராக இருத்தல் அவசியம் எனும் கருத்தினைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. எல்லாப் பயிற்சி நிறுவனங்களிலும் ஆய்வுக்கூடம், வடிவமைப்பு மற்றும் ஆராய்ச்சி மையங்கள், நூலகம், கணினி போன்ற வளரும் தொழில்நுட்பங்களைக் கொண்டு பயிற்சி அளிக்கப்படுகிறது.

சில நிறுவனங்கள்

சென்ட்ரல் புட்வேர் பயிற்சி நிறுவனம் - சென்னை
SISI 65/1, GST Road, Chennai 600 003.

மையத்தோல் ஆராய்ச்சி நிறுவனம்.
அடையார், சென்னை 20.

Institute of Design, Chennai.
134, Rosewood Offices,
நுங்கம்பாக்கம் மெயின்ரோடு, சென்னை - 34.

ஆசிரியர் குழு

CD, Floppy to Laser Printout @ 1 Rupee

Ph : 04364 - 223071
Cell : 9360321138

# BEST BROWSING CENTRE

*(High Speed Broad Band Connectivity)*

- ★ Internet
- ★ E-mail
- ★ Voice Chat & Webcam
- ★ Laser Print
- ★ Scanning
- ★ Lamination
- ★ Xerox
- ★ CD Writting
- ★ DVD Writting
- ★ Available CD & Floppy



Opp Hotel Pams, 29-B, Dr. Nizar Building,
Town Extension, **Mayiladuthurai - 609 001.**
E-mail prightsaran@yahoo.co.in





## செல்லாக் காசு . . .

*வளர்ந்து வரும் வல்லரசே*
*இல்லை. இல்லை. அமெரிக்காவே*
*நீ தாமிரபரணித் தண்ணீரை*
*"கோக்" ஆக்கினாய்*
*இரசாயனக் கலவையால்*
*நாங்கள் குடித்தோம் – மாண்டோம்*
*மாண்டது நாங்கள் மட்டுமல்ல*
*எங்கள் இந்திய தேசமும் கூட*
*உனக்குப் பெயர் வல்லரசு*
*எங்களுக்கு நீ செல்லாத காசு*




**ஆ.பிரபு**
இளம் விலங்கியல் (நிறை)

## ஹைக்கூ

*தூசி விழக் கூட*
*அனுமதிப்பதில்லை*
*என் கண்கள்*
*நீ மட்டும் எப்படி விழுந்தாய். . .?*



**ச.ஹரிஹரசுதன்**
முது கணிப்பொறியியல் (முதல்)

## புதிர்

*புரியவில்லை*
*நட்பின் இலக்கணம்*
*புரியாமல் இருப்பதால்தான்*
*இன்றும் புனிதமாகத்*
*தொடர்கின்றதோ . . .*



**அ.மனோரஞ்சிதம்**
முது நுண்ணுயிரியல் (முதல்)

☎: 224954 (shop) : 227954 (Resi)

**NATIONAL WATCH HOUSE**

No.10, Raj Building, Pattamangala Street,
Mayiladuthurai.

Dealer

TITAN · Ajanta® · HMT
SONATA · Promise · CASIO
ORPAT® · Telephone & Calculators · SARTIME

**SREE NATIONAL MARKETINGS**

*Products Distributors* ☎: 242029

No.10, Raj Building, Pattamangala Street,
Mayiladuthurai.

Ajanta® HEALTH · GOODLUCK COILS · VG ASAFOETIDA

Tooth Brush, Tooth Paste, Shampoo, Hair Oil,

# SURYA

## SPOKEN ENGLISH INSTITUTE

ஆங்கிலம் சரளமாகப் பேச எழுத இருவகைப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

1. குறுகிய காலப் பயிற்சி - 30 நாள்களில்
2. நீண்ட காலப் பயிற்சி - 90 நாள்களில்

குறிப்பு :- வெளிநாடு செல்பவர்களுக்கு சிறப்பு பயிற்சி

**SURYA SPOKEN ENGLISH INSTITUTE**

மாலிக்மேன்சன், புத்தகச்சோலை அருகில்,
மகாதானத்தெரு, மயிலாடுதுறை. Cell : 9364620106

Tutor : Govi.Asokan, M.A., M.Phil.,

*Nothing is impossible in the World*





## தேடல்



*அன்றாடம் அம்மா அம்மா என்று*
*அலைக்கும் அனாதைகள்*
*பேருந்து நிலையங்களிலும்*
*பொது இடங்களிலும் . . .*

எஸ்.சுரேந்திரன்
இளம் வேதியல் (இடை)

## ஜோக்ஸ்



*வீட்டுக்காரர் : என் வீட்டுப் பூட்டை உடைத்து ஒரு கோடி ரூபாயைத் திருடிட்டாங்கய்யா*
*போலீஸ் : ஹா. . .ஹா. .. ஹா*
*வீட்டுக்காரர்: ஏனய்யா சிரிக்கிறீங்க?*
*போலீஸ் : பூட்ல ஒரு ரூபாயக் கூட வக்கமுடியாதே. . . நீ எப்படிய்யா ஒரு கோடி ரூபாய வெச்ச . . .?*
*வீட்டுக்காரர்: . . .! ?*

டி.ஜெயக்குமார்
இளம் ஆங்கிலம் (இடை)

## ஹைக்கூ



மூன்று பக்கமும் கடல்
நான்கு பக்கமும் கடன்
இந்தியா . . .

செ.ராஜபாண்டியன்
இளம் பொருளியல் (இடை)

## துணுக்குகள்

**இந்திய விடுதலைக்குப் போராடிய முதல் தமிழக வீரர்?**

**பூலித்தேவர்**

**தமிழ் இலக்கியத்தில் ஞானபீட பரிசினை முதலில் பெற்றவர்?**

**அகிலன்**

க.கலைப்பிரியா
இளம் உயிர்த்தொழில்நுட்பவியல் (முதல்)

SINCE 1944 உ ☎ : 223176

நம்பிக்கை நாணயம் கைராசி

தங்கம், வெள்ளி, வைர நகைகள்
வாங்க சிறந்த இடம்

சுந்தர்
ஜுவல்லரி
A/C



141, காந்திஜி ரோடு,
மயிலாடுதுறை 609 001.






## மூடிய கதவுகள்



*திறம் மாறிய குங்குமம் சொல்கிறது*
*சிரிக்காத வளையல் சொல்கிறது*
*பேசாத காதணி சொல்கிறது*
*பாடாத கொலுசு சொல்கிறது*
*ஒலிக்காத மெட்டி சொல்கிறது*
*நீ விதவை என்று . . .*

எம்.சூர்யா
இளம் இயல்பியல் (முதல்)

## கல்லறை



*தாயே*
*நீங்கள் ஊற்றிய தண்ணீர் மழையில்*
*வளர்ந்த மரங்களால் உங்களுக்குக்*
*கண்ணீர் மழையே!*
*எங்களுக்குக் கருவறையில் இடம்*
*கொடுத்தத் தாயே! – இன்று*
*அன்னை இல்லத்தில் அநாதை நீயே!*
*சிறுபிள்ளையில் பேசவில்லையென்று*
*ஆலயத்திற்குச் சென்றாய்! இன்று*
*நாங்கள் பேசியதால் அநாதை*
*இல்லத்திற்குச் சென்றாய்!*
*நான் வளர்ந்து நிற்பது தாயின்பாலில்*
*உனக்கு ஒருவேளை*
*உணவு கொடுக்கவில்லை*
*என் வாழ்நாளில்!*
*என் இதயத்தில் இருப்பது நான்குஅறை*
*நீ இருப்பதிற்கு ஓர் அறை கொடுத்தேன்*
*கல்லறை!!*

த.ஜெகதீசன்
இளம் வேதியல் (நிறை)

ஏ
வி
சி

## மென்பொருள் உற்பத்தித்துறையில் தமிழகம் - ஒரு பார்வை

* மாநிலம் முழுவதும் உள்ள மென்பொருள் நிறுவனங்கள் 930.
* மொத்தப் பணியாளர்களின் எண்ணிக்கை 50,000க்கும் மேல் உள்ளனர்.
* இந்தியத் தகவல் தொழில்நுட்பத் துறையின் கொள்கையை முதன்முதலில் அறிவித்த மாநிலங்களில் தமிழகமும் ஒன்று.
* அமெரிக்கா ஹார்வாட் பல்கலைக் கழகம் நடத்திய ஆய்வில் தகவல் தொழில்நுட்பத்துறையில் இந்தியாவின் முதன்மை மாநிலமாகவும், தென்கிழக்கு ஆசியாவின் நுழைவுவாயிலாகவும் தமிழகம் உருவெடுக்கும் எனத் தெரியவந்துள்ளது.

### ஏற்றுமதி வளர்ச்சி

ஆண்டுக்காண்டு தமிழகம் ஏற்றுமதி வளர்ச்சியில் அதிகரித்து வருகின்றன.

| ஆண்டு | ஏற்றுமதி (கோடியில்) |
|---|---|
| 1993 - 1994 | 2 |
| 1994 - 1995 | 12 |
| 1995 - 1996 | 37 |
| 1996 - 1997 | 161 |
| 1997 - 1998 | 393 |
| 1998 - 1999 | 1246 |
| 1999 - 2000 | 1914 |
| 2000 - 2001 | 3116 |
| 2001 - 2002 | 5223 |
| 2002 - 2003 | 6316 |
| 2003 - 2004 | 7621 |
| 2004 - 2005 | 10,703 |
| 2005 - 2006 | 14,000 |

என எதிர்பார்க்கப்படுகிறது.

செ. கோபு
இளம் விலங்கியல் (இடை)





இ
த
ழ்

## வறுமை



*உத்தரவின்றி*
*உள்ளே நுழைந்தாய்*
*இன்றோ*
*விடையளித்தும் விடைபெற*
*மறுக்கின்றாய் . . .!*

க. கம்பன்
இளம் வணிகவியல் (நிறை)

## ஹைக்கூ



*இந்தியா ஒளிர்கிறது*
*இந்தியாவின் மான்செஸ்டர்*
*மும்பையின் குண்டுவெடிப்பு*
*வெளிச்சத்தில் . . .!*

க. அமிர்தகணேசன்
இளம் வேதியல் (இடை)

## துணுக்குகள்

மனித நாக்கின் சராசரி நீளம்? 10 செ.மீ.

சராசரியாக மனிதத் தலையில் எத்தனை முடிகள் இருக்கும்? 1 லட்சம்

இறந்து போன ஒரு மனிதனை எரித்தால் 4 கிலோ 77 கிராம் சாம்பல் தான் கிடைக்கும்.

1 நிமிட நேரம் முத்தம் கொடுப்பதற்கு 26 கலோரியை உடல் எரிக்கிறது.

அ. அரிகிருஷ்ணன்
இளம் தாவரவியல்(இடை)

## பதில் தான் என்ன?

*சேரர் வாழ்ந்த சந்தனமண் எங்கே?*
*சோழர் உலாவிய சோர்விலா நாடெங்கே?*
*பாண்டியர் பரப்பிய பாரம்பரிய*
*மொழியெங்கே?*
*உரமான நெஞ்சு மரமானது என்*
*கேள்வியால். . .*



பே. சுபா
இளம் வணிகமேலாண்மை (நிறை)

ஏ
வி
சி

**The VIVEKANANDA EHGLISH Academy**

**ஈஸியா இங்கிலீஷ் பேச . . .**

**Contact Ph : 228427**

*You know English. . . You write good English . .*
*But do you speak it - Fluently?*
*Easily & Continuously . . .*
*without unwanted H E S I T A T I O N S*

பிழையின்றி எழுத, இலக்கண பயிற்சியுடன் சொந்தமாக இங்கிலீஷ் எழுத மற்றும் சரளமாக இங்கிலீஷ் பேச சிறப்பு பயிற்சி அளிக்கப்படுகிறது.

**சிறப்பு அம்சங்கள்**

- அனுபவமுள்ள ஆசிரியர்களை கொண்டு நடத்தப்படுகிறது.
- மிக குறைந்த கட்டணம். . அதிக பயிற்சி காலம்.
- பயிற்சிக்கான புத்தகங்கள் வழங்கப்படுகிறது.
- வீடியோ, சி.டி. மூலம் ஸ்போக்கன் சிறப்பு பயிற்சி.
- ஆங்கிலத்தில் சரளமாக பேச சிறப்பு பயிற்சி.
- அனைவருக்கும் கல்வி, வயது வரம்பு இல்லை.

**வெளிநாடு செல்வோர்க்கு 30 நாட்களில் ஸ்போக்கன் இங்கிலீஷ் சிறப்பு பயிற்சி**

**The VIVEKANANDA EHGLISH Academy**

141, ஹமா சென்டர்,
முதல் தளம்,
பட்டமங்கலத்தெரு,
மயிலாடுதுறை. Ph : 228427





# மறவா நினைவுகள்



இ
த
ழ்

*ஈன்றெடுத்த அன்னையை மறப்பதா?*
*தூக்கிச் சுமந்த தந்தையை மறப்பதா?*
*அறிவுக்கண்களைத் திறந்த ஆசானை மறப்பதா?*
*வாழ்வின் சிறந்த நண்பர்களை மறப்பதா?*
*பசிப்பிணிப் போக்கிய விடுதியை மறப்பதா?*
*பட்டம் கொடுத்திட்ட பல்கலைக்கழகத்தை மறப்பதா?*
*பட்டத்திற்குத் தகுந்த வேலையைக் கொடுத்து*
*அழைத்த அரசாங்கத்தை மறப்பதா?*
*கொடுத்த வேலைக்குக் குன்றாமல் ஆக்கமும்*
*ஊக்கமும் அளித்த தலைமை அதிகாரியை மறப்பதா?*
*நாம் செய்யும் எந்தப் பணியானாலும் அப்பணி*
*அற்புதமான பணி மிகச்சிறந்த பணி என்று*
*அதனை அன்போடும் பண்போடும் ஆற்றலோடும்*
*செயல்படுத்த வேண்டும் என்று எண்ணற்ற*
*அறிவுரைகளைக் கூறிய கல்லூரியின் சிறந்த*
*பொறுப்பாசிரியர்களை மறப்பதா?*
*எதை மறப்பேன்? யாரை மறப்பேன்?*
*எப்படி மறப்பேன்? எனக்கே தெரியவில்லை. . .*

**ருக்குமணி**
இளம் இயல்பியல் (இடை)


## துணுக்குகள்

ஓசோன் படலத்தில் ஓட்டை விழுந்திருப்பதும், விஞ்ஞானிகள் அதைப்பற்றிக் கவலைப்பட்டுக் கொண்டிருப்பதும் நாம் அறிந்ததே. ஆனால் அந்த ஓசோனின் ஓட்டை எவ்வளவு பெரியது என்று தெரியுமா? இந்தியாவைப் போல் ஏழு மடங்கு பெரியதான ஓட்டை அது.

**இரா.சிவானந்தம்**
இளம் கணிதம் (இடை)

# கல்லூரியின் முதல் நாள் . . .

தத்தித் தவழ்ந்த மழலை
கற்றது பள்ளிச்சோலையில்
சுட்டி நடைபோட்டு எட்டிக்
கால்பதித்தது
கல்லூரிச் சாலையில்
நெஞ்சிலே தயக்கம்
கண்ணிலே கலக்கம்
ஒவ்வாத மனத்தோடு முதல்நாள்
காலடி வைத்தேன்
எரிமலைச் சாரலிலே
பனிமலைத் தூறலாய்
நண்பர்கள் வந்தனரே
நறுமணமே கமழ்ந்தது
இனியென்ன கவலையென்று
இளந்தூதுவிற்கு க்
கவிதை எழுதுகிறேன் . . .



டி . வைஷ்ணவி
இளம் கணிப்பொறியியல் (முதல்)

## மதக் கலவரம்



பேருந்தின் உரிமையாளர் இந்து
பேருந்தின் ஓட்டுநர் இஸ்லாமியர்
பேருந்தின் நடத்துநர் கிறித்துவர்
ஆனால் கலவரத்தால் எரிகின்ற
பேருந்து என்ன மதம் . . . ?

மோ.நிவாஸ் துர்க்காராம்
இளம் வேதியல் (இடை)

## ந ட் பு



நிலவு இரவைத் தேடி வருகிறது
தென்றல் மலரைத் தேடிவருகிறது
அலை கரையைத் தேடிவருகிறது
கனவு உறக்கத்தைத் தேடி வருகிறது
எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாமல்
வருவதே நட்பு . . .

அ. செய்யது சுல்தான் பீவி
இளம் இயல்பியல் (நிறை)





## பேச்சுத்தமிழ்



வேகத்தை அதிகரிப்போம்
அறிவைப் பெரிதாக்குவோம்
சாதனையை இருப்பிடமாக்குவோம்
வேதனையைத் தொலைவிடமாக்குவோம்
சிந்தனைச் சீரியதாக்குவோம்
செவ்விதழ் வார்த்தைகளைத்
தமிழாக்குவோம் . . .

அ.ராக்கமல்
இளம் காட்சித்தகவியல் (இடை)

## துணுக்குகள்


பிலிப்பைன்ஸ் நாட்டில் கூம்பு வடிவில் ஆயிரக்கணக்கான சிறிய மலைகள் உள்ளன. இந்த மலைகள் டாக்லைட் மலைகள் என்று அழைக்கப்படுகின்றன.

மராட்டிய மாநில நாகபுரி மருத்துவமனையில்· டாக்டர் ராஜேந்திர சாண்டாக், ஒரு நோயாளிக்கு ஏழு நாட்களில் இருபதாயிரத்து ஐந்நூற்று முப்பது ஊசிகள் போட்டு, பூச்சி மருந்து குடித்த ஒருவரைக் காப்பாற்றினார். நம்ப முடியாத இந்தச் சாதனையைக் கின்னஸ் பிரசுரிக்க உள்ளது.

ஆர்.புவனேஸ்வரி
முது வணிகம் (முதல்)

## தி ற மை

நீ எப்போதும் அங்கரிக்கப்பட்டக்
கண்ணாடியாகவே இரு
அப்போது தான் அவர்கள்
உன் முகம் பார்ப்பார்கள்
உன்னின் முயற்சி, உழைப்பு எனும்
பாதரசம் கொட்டிவிட்டால் அவர்கள்
முகம் பார்க்க நீ
ஏங்க வேண்டியிருக்கும். . .



கே.அம்பலவாணன்
இளம் விலங்கியல் (நிறை)

# நெ.1 தென் தமிழகத்தின் அதிவேக டிஜிட்டல் பிரிண்டிங்



- திருமண வாழ்த்து
- அரசியல் விளம்பரங்கள்
- சினிமா விளம்பரங்கள்
- வாகனங்களுக்கு வினைலில் பிரிண்டிங்
- கருப்பு வெள்ளை படத்தை கலராக மாற்றுதல்

**உங்கள் எண்ணங்களை வண்ணமயமாக்குவதில்**

**முதல் இடம்! முதல் இடம்!! முதல் இடம்!!!**

எதிலும் கொஞ்சம் எக்ஸ்ட்ரா

**A&D DIGITAL'S**
THE DIGITAL PEOPLE

எண் 5/6, சுந்தரம் தியேட்டர் அருகில், கூறைநாடு, மயிலாடுதுறை - 1.

☎: 04364 - 225 912 93646 11036 / 93602 48063






ஏ வி சி இ த ழ்

## உன் வசம் நான்...



என் தோட்டத்தில் ரோஜாக்கள் இல்லை
உன் நினைவுகளே நித்தமும் மலர்கிறது
என் வாசலில் கோலங்கள் இல்லை
உன் புன்னகையே கோலமாய்த் தெரிகிறது
என் வானத்தில் விண்மீன்கள் இல்லை
உன் வாய்மொழிச் சிதறலே
விண்மீன்களாய்..
என் இதயத்தில் இயக்கம் இல்லை
உன் பெயரே இயக்கமாய் ஆனது
மொத்தத்தில் என்னையே
உன் வசமாக்கிவிட்டாய்...

 டி.கார்த்திக்
இளம் தாவர உயிரியல் (இடை)

## தாய்மை



கடவுள் எதிர்காலத்தில்
வசந்தம் மரை வேண்டும் என்று
உலகைப் படைத்தான்
அதில் சில ரோஜாக்களைப் படைத்தான்
மலரில் மனத்தை ஊற்றினான்
பறவைக்கு ஒரு பாடலைத் தந்தான்
மாங்கனிக்குள் தீஞ்சுவையைச்
சொட்ட வைத்தான்
தோகை மயிலுக்கு
வண்ணப்பட்டாடை உடுத்தினான்
எல்லாம் படைத்த இறைவன் – இறுதியில்
தாய்மை என்ற அன்னையின்
உள்ளத்தைப் படைத்தபோது
படைப்பின் இமயமாய் வளர்ந்து நின்றான்...

அ.ஜான் விமல்
இளம் ஆங்கிலம் (இடை)

## விடுகதை

ஆயிரம் பேர் வந்து சென்றாலும் வந்த சுவடு தெரியாது அது என்ன?
எறும்பு

இந்த மானால் நடக்க முடியாது அது எந்த மான்?
அந்தமான்

சு.பிரசன்னா
இளம் வேதியல் (முதல்)

**அருள் புக்ஸ், ஜெராக்ஸ் & ஐஸ்கிரீம் பார்லர்**

**STD, ISD & PCO**

ஜெராக்ஸ் காப்பி 1 க்கு 0.40 பைசா

கல்லூரி மாணவர்கட்குத் தேவையான அனைத்து வகை நோட்டுகள், பேனாக்கள் மற்றும் ஸ்டேஷனரி வகைகளும் குறைந்த விலையில் தரமானதாகக் கிடைக்கும்

எந்நாளும் சுவையான **ஐஸ்கிரீம்** வகைகள் கிடைக்கும்.

*வருகை தர வேண்டுகிறோம்.*



**அருள் புக்ஸ்**

ஏ.வி.சி.கல்லூரி [ எதிரில் ]
SMH பில்டிங், மன்னம்பந்தல்.

**ராஜா**

**தையல் பள்ளி**

[ மகளிர் மட்டும் ]



எங்களிடம் நவநாகரீக முறையில் சுடிதார்கள், ஜாக்கெட்டுகள் தைத்துத் தரப்படும். சுடிதார் மெட்டீரியல்ஸ் கிடைக்கும்.






மாணவர்களின் வினாவும்.
ஆசிரியர் குழுவின் விடையும் . .

# இருமுனைகள்

*ஏன் அரசியல்வாதிகள் எல்லாம் வெள்ளாடை அணிகிறார்கள்?*
**பா.விஜய்** முது ஆங்கிலம் (முதல்)
மனத்தில் உள்ள அழுக்கை மறைப்பதற்காகக்கூட இருக்கலாம்.

*தொழில் கல்வியையும், பட்டப்படிப்பையும் ஏன் வித்தியாசப்படுத்துகிறார்கள் ?* **ந.கிரிஜாராணி** இளம் வேதியல் (முதல்)
உடல் ரீதியாகவும். மன ரீதியாகவும் நாம் வித்தியாசப்படுத்தப்படுவதில்லையா.

*கடல் நீர் ஏன் உப்புக் கரிக்கிறது?*
**சு.சரண்யா** இளம் நுண்ணுயிரியல் (நிறை)
ஒரு வேளை உப்பிட்ட வரை உள்ளளவும் நினை. என்ற பழமொழி தெரிந்திருக்குமோ என்னவோ. .

*ஒரு மனிதன் தன் வாழ்வை நடத்தும் விதம் எவ்விதம்?*
**கி.சுபப்பிரியா** இளம் நுண்ணுயிரியல் (முதல்)
உழைப்பையும். முயற்சியையும். கருவியாகக் கொண்டு இன்பத்தை அடையும் விதமே வாழ்க்கை நடத்தும் விதம்.

*இன்னும் 20 ஆண்டுகளில் இந்தியா எந்தத் துறையில் முதலிடம் வகிக்கும்?* **க.தீபா** இளம் இயல்பியல் (நிறை)
வல்லரசாக வேண்டும் என்ற எண்ணத்தில் அனைத்துத் துறையுமே முதலிடத்திற்குப் போட்டிப்போட்டுக் கொண்டுதான் இருக்கும்.

**சமுதாயத்தில் அக்கறை உள்ளவர்கள் ஆண்களா? பெண்களா?**
**பு.லாவண்யா** இளம் வேதியல் (இடை)
இக்கறைக்கு அக்கறை பச்சையாகத் தான் தோன்றும்.

**பட்ஜெட்டில் 'துண்டு' மட்டும் விழுவது ஏன் ?**
**இரா.இந்து** இளம் வேதியல் (இடை)
எடை குறைவாக இருப்பதாலோ என்னவோ. . . !

**திருவள்ளுவருக்கும், கம்பருக்கும் கவிதைப் போட்டி வைத்தால் யார் வெற்றி பெறுவார்கள்?** **து.ராசா** இளம் இயல்பியல் (நிறை)
உங்கள் இரு கண்களில் எதற்குப் பார்வை அதிகம் என்று நினைக்கின்றீர்கள். .

**வாழ்க்கையில் காதல் வேண்டுமா? அல்லது வேண்டாமா?**
**அ.தினேஷ்குமார்** இளம் வணிகம் (முதல்)
உன் அன்னையின் பாசம் கூட ஒரு வகைக் காதல் தான்.

**நாகரிகம் என்பது உடை சம்பந்தப்பட்டதா? நடை சம்பந்தப்பட்டதா?** **தீபன்சக்கரவர்த்தி** இளம் கணினி (முதல்)
ஆள்பாதி. ஆடை பாதி என்பதை மறந்து விட்டீர்களோ . .

**நம் கல்லூரியின் முதல்வர் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?**
**ஜி.கருணாகரன்** இளம் கணினி (முதல்)
சுறுசுறுப்பின் சொந்தக்காரர். உழைப்பின் உயர்விடம் அவர். முன்னேற்றத்தின் முதல்வர் அவர்.

**அன்பில் சிறந்த அன்பு அன்னையிடமிருந்து வருகிறதா? தந்தையிடமிருந்து வருகிறதா?**
**சு.சுதாகர்** இளம் கணிதம் (நிறை)
ஒரு கண்ணில் அடிபட்டால், மறுகண் கலங்குவதில்லையா. . .





**கல்லூரியிலுள்ள வசதிகளை அனைவரும் ஏன் பயன்படுத்துவதில்லை? அதைப்பற்றி அனைவரும் அறியாத காரணத்தாலா?** **ஜி.கல்பனா** இளம் வணிகம் (முதல்)
கல்லூரிக்கு மிச்சம் பன்றாங்களோ என்னவோ . . .



**சட்டத்தின் மூலமாக மட்டும் மூடநம்பிக்கையை ஒழிக்க முடியுமா ?**
**வி.மீனாட்சி** இளம் நுண்ணுயிரியல் (இடை)
ஒருகை மட்டும் தட்டினால் ஓசை வராது.

**மனிதாபிமானம் என்றால் என்ன ?**
**வா.அருண்பிரசாத்** இளம் நுண்ணுயிரியல் (இடை)
உங்களிடம் இருப்பது தான்.

**தமிழைச் செம்மொழியாக்கியதால் என்ன பயன்?**
**வை.அழகிரிபாலன்** முது கணினிப்பயன்பாட்டியல் (நிறை)
உலகளவில் வளர்ச்சியடைய வாய்ப்பு.

**சாதிகள் ஒழியுமா?** **கோ.பாஸ்கரன்** முது தகவல் தொடர்பியல் (நிறை)
நீங்கள் நினைத்தால். . . .

**கல்லூரிக்குச் சீருடை கொண்டு வருவதைப் பற்றி . . ?**
**எஸ்.பிரசன்னா** இளம் வேதியியல் (முதல்)
எல்லாம் நன்மைக்கே. . .

**கடவுள் இருக்கிறாரா? இல்லையா?**
**எஸ்.பூர்ணிமா** இளம் கணினிப்பயன்பாட்டியல் (இடை)
இருக்கிறார் என்பவருக்கு இருக்கிறார்.
இல்லை என்பவருக்கு இல்லை.

**இளந்தாது என்றால் . . .?** **ந.பூமகள்** இளம் வேதியியல் (இடை)
சொல்வதில் என்றும் புதுமை. செய்வதில் என்றும் இளமை.

ஆசிரியர் குழு





* The only True Broadbrand Internet Cafe
* The first Broadbrand Internet Cafe in Mayiladuthurai & Nagapattinam District.
* Browsing @ 256 Kbps. each P.C.
* Air Conditioned Comfort
* Colour Scanning,
* Low Cost Laser Print Outs
* CD / DVD Writing.
* Way 2 Talk Facility (Smart option to ISD) Call ISD for as low as Rs.3.50 per minute
* The first Gamedrome in Mayiladuthurai
* Latest 3-D Game Titles

The HUB

# 117, Mirror Tower, Mahathma Gandhiji Road,
Mayiladuthurai. Tel: +91-4364-243451






## ஹைக்கூ

குழந்தையின் வளையல்
குமரிப்பெண்ணின்
காதில் . . .

எஸ்.ரெங்கதுரை
இளம் தாவர உயிரியல் (இடை)



செடி கொடிகளின்
தூக்கத்தைக் கெடுக்கிறது
நிலா (வெளிச்சம்)

பி.சுகந்தி
இளம் வேதியல் (நிறை)

## அரசியல் காதல்

அவனின் பார்வை
வேட்பு மனுத் தாக்கல்
அவனின் சிரிப்பு
வேட்புமனு பரிசீலனை
அவனின் நடை
போட்டியிடத் தகுதி
அவனின் பேச்சு
வேட்பு மனு ஏற்பு
அவனின் கடிதம்
கால் டெபாசிட்
அவனின் இசைவு
அமோக வெற்றி. . .



கே.ரஞ்சனிதேவி
இளம் வணிகம் (நிறை)

## ஏக்கத்தோடு தாய்நாடு

கண்மூடிக் கிடந்த காலம்
கருப்பாய் விடிந்தது
போனது போகட்டும்
இளைஞனே புறப்படு
உனது சாதனைக்காக
ஏக்கத்தோடு நிற்கிறது
உனது தாய்நாடு . . .



ச.பார்த்திபன்
முது மின்னணுவியல் (நிறை)

மயிலாடுதுறையில் தங்கள் நல்லாதரவில்

**ஹேப்பி வில்லேஜ் ரெஸ்டாரண்ட் A/c**

எங்களிடம் தந்தூரி, சைனீஸ், இந்தியன் கிரேவி வகைகளும், புரோட்டா வகைகளும், கூல்டிரிங்ஸ், ஐஸ்கிரீம் வகைகளும், சுத்தமாகவும், சுகாதாரமாகவும், கிடைக்கும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் உங்கள் நல் ஆதரவை நாடும்:

**JRS ஹேப்பி வில்லேஜ்**

**JRS ஹேப்பி டிராவல்ஸ்**

**Semi Sleeper**

தினசரி இரவு 10-45 மணிக்கு வழி
மயிலாடுதுறை - சென்னை
திருவான்மியூர் - அடையார் - கிண்டி - ஏர்போர்ட் -
தி.நகர் - எக்மோர் - கோயம்பேடு.

பழைய ஸ்டேட் பேங்க் ரோடு.
மயிலாடுதுறை.
☎ : 04364 - 240212





## வழிகள்



*இருளைக் கண்டு அரண்டவனுக்கு*
*வெளிச்சத்தின் வழி தெரியாது*
*துன்பத்தைக் கண்டு பயந்தவனுக்கு*
*இன்பத்தின் வழி தெரியாது*
*தோல்வியைக் கண்டு பயந்தவனுக்கு*
*வெற்றியின் வழி தெரியாது*
*உழைப்பை மறந்தவனுக்கு*
*முன்னேற வழி தெரியாது*
*வாழ்க்கையை நேசிப்பவனுக்கு*
*வாழ்வது இனிமை.*
*வாழ்க்கையை வெறுப்பவனுக்கு*
*வாழ்க்கையே வேதனை . . .*

**எஸ்.வி.எம்.கஜினி**
இளம் காட்சித்தகவியல் (முதல்)

## தாடி



*என்னவள் தந்துவிட்டுப்*
*போன – முத்தத்தைக்*
*காப்பாற்றிக் கொள்ள*
*நானே போட்ட வேலி*

**பி.ராஜா**
இளம் வேதியல் (நிறை)

## பொய்க் கோபம். .

*தாயின் மீது கோபம்*
*விரக்தியால் விரதம் – அதில்*
*வயிரல்லவா பற்றி எரிகிறது*
*பசியால் . . .*



**எம்.சூர்யா**
இளம் இயல்பியல் (முதல்)

# பொறுமையுள்ள பெருமைகள் . . .



கமலும், கோபாலும் நெருங்கிய நண்பர்கள். கோபால் திருவிழாவிற்காகத் தன் சொந்த ஊரான மங்களூர் கிராமத்திற்குச் சென்றிருந்தான். அங்கே நடந்த நம் கலாச்சாரத்திற்கும், பண்பாட்டிற்கும் எடுத்துக்காட்டாக விளங்கும் கிராமிய வீர விளையாட்டுகள் பற்றிக் கமலுடன் உரையாடுகிறான். . . .

கமல்: ஹாய் கோபால் என் ரொம்ப நாளா ஆளயே காணோம்.

கோபால்: எங்க ஊர் திருவிழாவுக்குப் போயிருந்தேன் கமல்.

கமல்: ஓ மங்ளூர்னு ஒரு காஸ்மோபாலிடன் சிட்டி சொல்வியே அதுவா?

கோபால்: கிண்டல் பண்ணாதே கமல். சிட்டியிலேயே இருந்த நமக்கு கிராமத்தைப் பற்றித் தெரியாது. கிராமத்தை நம்ம ரொம்ப மிஸ் பன்றோம் கமல்.

கமல்: அப்படி என்ன கிராமத்துல இருக்கு? எனக்குத் தெரிஞ்சி கிராமம் இயற்கை செழிப்போட இருக்கும். நம்ம மாதிரி இளைஞர்களுக்கு உபயோகமான பொழுதுபோக்கு ஏதாவது இருக்கா?

கோபால்: திருவிழா சமயங்கள்ல நிறைய கிராமிய விளையாட்டு போட்டிகள் நடந்துச்சு. சிலம்பம், உரியடித்தல், சருக்கு மரம், ஜல்லிக்கட்டுன்னு நிறைய இருக்கு.

கமல்: என்னது? ஜல்லிக்கட்டா? அத நெனச்சிதான்டா கிராமிய விளையாட்டுன்னாலே நெஞ்சு பதைக்குது. இவ்ளோ ஆபத்தான விளையாட்டு எதுக்குதான் விளையாடுறாங்களோ?

கோபால்: நானும் அப்படிதான்டா நெனச்சேன். ஆனா அங்கபோய் விசாரிச்சுப் பார்த்தாதான் தெரிஞ்சுது. அது நம்ம கலாச்சாரத்தையும் பண்பாட்டையும் அஃதாவது வீரத்தையும் எடுத்துக்காட்டுதுன்னு.







கமல்: அதுக்காக இவ்வளவு ஆபத்து தேவையா? நம்ம மாதிரி கிரிக்கெட், வாலிபால், புட்பால்ன எவ்வளவோ விளையாட்டெல்லாம் இருக்கு. அதை விட்டுட்டு ஏன் இதெல்லாம் . . ..

கோபால்: எந்த விளையாட்டுகளில் தான் ஆபத்து இல்லை? எல்லா விளையாட்டுகளிலும் ஆபத்து இருக்கு. கிரிக்கெட், புட்பால் எல்லாம் எல்லாராலும் விளையாட முடியும். ஆனா இதெல்லாம் எல்லாராலும் முடியுமா?

கமல்: அது சரி. இதனால் என்ன பயன் இருக்கு?

கோபால்: அந்தக் காலத்துல ஒவ்வொரு செயலிலும் ஓர் அர்த்தம் இருக்கு. எப்படி ஜல்லிக்கட்டு நம்ம வீரத்தைக் குறிக்குதோ அதே மாதிரி தான் மத்த கிராமப்புற விளையாட்டுகளிலும் ஒரு காரணம் இருக்கு தெரியுமா?

கமல்: எனக்குத் தெரிஞ்சி சிலம்பம் தற்காப்புக் கலைக்குப் பயன்படுத்துறாங்க. ஆனா அத ஏன் போட்டியா வக்கணும்.

கோபால்: அப்போ கிரிக்கெட், செஸ் எல்லாம் வேல்ட் பேமஸ் விளையாட்டு மாதிரி ஏன் இல்ல?

கமல்: அப்படின்னா கிராமப்புற விளையாட்டுகள் மட்டும் விளையாடணும். கிரிக்கெட் எல்லாம் விளையாடக் கூடாதுன்னு சொல்றியா? இது நிஜம். புலிகேசி காலம் இல்லப்பா.

கோபால்: அந்தக்கால விளையாட்டுகள் நம்ம மனசுல கவர்ச்சியா தெரியுது. இத நம்மல மாத்திக்கவும் முடியாது. ஆனா உலகமே போற்றும் இந்தக் கவர்ச்சிகரமான விளையாட்டுகளுக்கு நம் மண் தான் முன்னோடி என்பது மட்டும் இக்கால இளைஞர்கள் மறக்காமல் இருந்தா போதும்.

கமல்: ஆமான்டா. அனுமாருக்குதான் தன் பலம் தெரியாதுன்னு சொல்வாங்க. அது மாதிரியே நமக்கிட்டயே இவ்வளவு பெருமைகள் இருக்கும் போது அதைவிட்டுட்டு வெளிநாட்டு போட்டிகளையே பெருமையா நினைச்சிகிட்டு இருக்கோம்னு நினைச்சா எனக்கே ரொம்ப வருத்தமா இருக்கு.

ப.மோகனஸ்ரீ
இளம் நுண்ணுயிரியல் (இடை)

பாத்திரக் கடை

# S.N.குருமூர்த்தி சன்

## பித்தளை & எவர்சில்வர்



பெரியக்கடைத் தெரு,
மயிலாடுதுறை – 1.
☎: 222816





# வானத்தின் கீழ் ஒரு வையகம்

சமுதாய வீதியில் நிலையாய்
நிற்கும் பெண்ணே
நீ விழித்துக்கொள்!
சாதனை படைக்க வேண்டிய
உன் இளம் வயதில்
திருமணம் வேதனையை
படைத்துவிடும்
ஆதலால் நீ விழித்துக்கொள்!
சமுதாயத்தை முள்ளாய் நினைத்துத்
தள்ளிவிட்டு
உன் முயற்சியைக் கிள்ளிவிடு
தாய் நாட்டை மனத்தில் வைத்துக்
கொண்டும்
தாய்மொழியைச் சிந்தனையில்
வைத்துக் கொண்டும்
உன் முயற்சி தொடரட்டும்
உன் முயற்சி வெற்றியடையும் போ;
நீ காண்பாய்
அந்த வானத்தின் கீழ்
ஒரு வையகம் . . .



சு. விவேக்
இளம் உயிர்த்தொழில்நுட்பவியல் (இடை)

## ஹைக்கூ . . .

மெல்லிய இதழில்
மென்மையான
முத்தம்
குழந்தைக்கு –
தாய் . . .



எஸ். ரெங்கதுரை
இளம் தாவரஉயிரியல் (இடை)

வெட்கப்பட்டுத்
தலை
குனிந்தது. . .
தாய்மை
அடைந்த
வாழை மரம் . . .

# INFO TECH

## Computer Education Centre

II Floor, Kamal Mansion, 140 Pattamangala Street,
Mayiladuthurai - 609 001.
Ph : 04364 - 242066, Cell : 9942259104

வருடத்திற்கு இரு முறை பொதுத் தேர்வுகள் வேலை வாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யத் தக்க மார்க்ஷீட் மற்றும் சான்றிதழ் ஒரு வருட பயிற்சியின் இறுதியில் ப்ராஜெக்ட் தேர்வுக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் மட்டுமே ஒரு வருட பயிற்சிக்கு ரூ. 3700/- ம் 6 மாத பயிற்சிக்கு ரூ. 2000/- மட்டுமே.

1 வருட பயிற்சி :

**Ist semester** (முதல் 6 மாதத்திற்கு)
**PGDCA / HDCA : Fundamentals of Computer, Ms-Dos & Internet Concepts, Foxpro MS-Office**
**IInd Semester** (இரண்டாவது 6 மாதத்திற்கு)
**C ++, Oracle, Visual Basic, Project**

**Center Course தேர்வு இல்லாதவை**

**Accounting software : Tally**
**Diploma in Desk Top Publishing (DDTP)**
**Pagemaker, Photoshop, Coraldraw**

தேர்வு இல்லாத கோர்ஸ் :

**ADCA : Fundamentals of Computers, Ms-Dos & Ms-windows, Ms-word, Ms-Excel, Ms-Powerpoint, Internet Concepts, Foxpro. C ++, Oracle, Visual Basic, Pagemaker, Photoshop, Coraldraw**

1 வருடத்திற்கு ரூ. 5,500/- மட்டுமே.







SUN WIN THE WORLD...

☎ : (04364) 226975
Cell : 9443187730

CADD WORLD

SSC

SUN SOFTWARE COLLEGE

JOIN SSC

GET PROFESSIONAL CARRIER

| | |
|---|---|
| C, C++, Java, Unix | IDEAS, ADT, FEM/FEA |
| VB, VC++, ASP, Oracle | ASP.NET, VB.NET |
| All MultiMedia Course | TALLY 7.2 |
| Digital Graphics | Acad 2005, Pro-E, ANSYS |
| Laser Printing | Hardware & Networking Courses |

**Special Features**

* Parking Facility
* Extensive Guidence
* Specialized Project Team
* Well Equipped Lab

UG, PG, PROJECT

TCEDS
COMPUTER EDUCATION
An.ISO 9001:2000 Certified Institution

TAMILNADU COMPUTER EDUCATION DEVELOPMENT SCHEME

IN PGDCA, PGD-E.COM, DCA, DIT Certificate

ALL KIND OF SOFTWARE, HARDWARE COURSES & DTP WORKS

Razak Tower, #15, Cutchery Road,
Mayiladuthurai - 1. E-mail: Srisatheesh_SSC@Sify.com

ஏ
வி
சி





இ
த
ழ்

## பசி

இலக்கியவாதிக்கு
எழுத்துப் பசி...!
பேச்சாளனுக்கு
வார்த்தைப் பசி...!
அரசியல்வாதிக்கு
பதவிப்பசி...!
ஆன்மிக வாதிக்கு
ஞானப்பசி...!
என்னற்றுக்
குழந்தைகளுக்கோ
வறுமைப் பசி...!

க. அமிர்தபாலு
இளம் நுண்ணுயிரியல் (முதல்)

## ஹைக்கூ...

ரொட்டித் துண்டில்
காளான் ஆக்கிரமிப்பு
கதறுகிறது கைக்குழந்தை
கால் வயிற்றுக்
கஞ்சிக்கு...

எம்.நவரசகண்ணன்
இளம் விலங்கியல் (நிறை)



## முரண்...

தமிழ்ப் பத்திரிக்கையில்
விளம்பரம்...
ஆங்கிலத்தில்...

எஸ்.மணிமொழி
இளம் வேதியல் (நிறை)

இந்தியப் பேருந்திலுள்
அமெரிக்க நேரம்...
கடிகாரம் தாமதம்...

பா.வித்தியநாதன்
இளம் இயல்பியல் (நிறை)

## ஜோக்ஸ்



நோயாளி : டாக்டர் ரெண்டு நாளா இடப்பக்க கடாபல் ஆடுது
டாக்டர் : என்ன பாட்டுக்கு...?
நோயாளி : ....?

எம்.ராஜேஷ்குமார்
இளம் கணினி (இடை)

# முயற்சி . . .

உலக அறிவியல் அறிஞர் சாக்ரடீஸ் ஆற்றில் நீராடிக்கொண்டிருந்தார். அப்பொழுது அவர் அருகில் குளித்துக் கொண்டிருந்த இளைஞன் சாக்ரடீஸிடம் ஒரு கேள்வியை எழுப்பினான். இலட்சியத்தை அடைவதற்கு என்ன செய்ய வேண்டும்? என்று வினவினான். அவனை உற்றுப்பார்த்த சாக்ரடீஸ் அவனைத் தன் பக்கம் அழைத்தார். அருகில் வந்த அந்த இளைஞனின் தலைமுடியைப் பிடித்துத் தண்ணீருக்குள் வைத்து அழுத்தினார்.

அவன் மேலே வர எவ்வளவோ முயற்சி செய்தான். ஆனால் சாக்ரடீஸ் விடவில்லை. சில நிமிடம் கழித்து அவனைத் தண்ணீருக்குள் இருந்து விடுவித்தார். மரணத்திலிருந்து தப்பித்தது போல அந்த இளைஞன் சாக்ரடீஸைப் பார்த்தான். அப்பொழுது சாக்ரடிஸ் அவனுக்கு அறிவுரை வழங்கினார்.

நீ தண்ணீருக்குள் உன்னை வைத்து வைத்து அழுத்தும்பொழுது நீ சுவாசிக்கும் பிராணவாயு கிடைக்காமல் போன பொழுது, அந்தப் பிராணவாயுவை சுவாசிப்பதற்கு நீ எல்லாவற்றையும் மறந்து சுவாசித்தல் மட்டுமே உன் ஒரே குறியாய் இருந்ததல்லவா? அதுபோல முயற்சி செய்ய வேண்டும் என்று கூறினார். இலக்கை அடைய ஒரே சிந்தனையும், தெளிவான முடிவும் அவசியம் இவை மட்டும் இருந்தால் போதும் லட்சியத்தை அடைவது நிச்சயம்.

**வீ.ராஜேஷ்குமார்**
இளம் வரலாறு (இடை)





# மரங்கள்

இதழ்

*வெயில் வாசிகளின்*
*தற்காலக் குடியிருப்பு*
*ஆதிவாசிகளின் நிரந்தரக் குடியிருப்பு*
*இறந்த இலைகளின்*
*இறுதி ஊர்வலம் காற்றின்*
*இன்னிசையோடு நடைபெறுகிறது*
*பூமித்தாயின் பச்சைக்*
*கொப்பளங்கள் மரங்கள்*
*பூமிப்பெண்ணின் விரல் நீட்சிகள்*
*மரங்கள் கிளைகளின் நடனம்*
*இலைகளின் இன்னிசை என*
*காற்றுடன் அப்படியென்ன சல்லாபம்*
*உனக்காக உழைக்கும்*
*வேர்களை மறந்து விட்டு*
*பூக்களைப் புகழ்கிறது இவ்வுலகம்*
*பறவைகள் எச்சங்களையாவது*
*மிச்சமிட்டுச் செல்கின்றன*
*நாங்கள் வேர்களைக் கூட*
*விடுவதில்லை . . .*



**தெ.கணேஷ்குமார்**
முதுகலைத் தமிழ் (முதல்)



## ஜோக்ஸ்

*பையன்* : *அப்பா உன்னால இருட்டுல எழுத முடியுமா?*
*அப்பா* : *முடியுமே!*
*பையன்* : *அப்ப லைட்டை அணைக்கறேன் என் ரிப்போர்ட் கார்டுல சைன் பன்னுங்க பாப்போம் . . .*

**எஸ்.வி.எம். கவினி**
இளம் காட்சித்தகவியல் (முதல்)

ஏ
வி
சி

# பரணி ஆப்செட் பிரிண்டர்ஸ்

26, நாராயணப்பிள்ளைத் தெரு, மயிலாடுதுறை.

☎ : 227328

*வாடிக்கையாளர்களின் மேலான கவனத்திற்கு . . .*

- திருமண அழைப்பிதழ்கள்
- லெட்டர்பேடு
- விசிட்டிங் கார்டுகள்
- ரசீது புத்தகங்கள்
- **புராஜெக்ட் ஒர்க்**
- புத்தகப் பணிகள்
- லேசர் பிரிண்டிங்
- கலர் டிசைனிங்
- ஸ்கிரீன் பிரிண்டிங்
- ஸ்கேனிங்
- பைண்டிங்
- லேமினேஷன்
- வினைல் விளம்பர போர்டுகள்

நவீன தொழில் நுட்பத்துடன் குறித்த நேரத்தில் செய்து தருகிறோம்.

***தொடர்க. . . . தங்கள் நல்லாதரவு . . .!***

---

# BALU XEROX

நகல் எடுக்க . . .

நம்ம கடைக்கு வாங்க . . .

## SUPER XEROX

## வெறும் 35 பைசா மட்டும்

**A.V.C.** ***கல்லூரி எதிர்புறம்***

***என்றும் அன்புடன்,***

**M. பரணி**








# ALPHA COMPUTERS

ALPHA COMPUTERS

Authorised Training Center of STG

STG

- HARDWARE & NETWORKING
- A+ CERTIFICATION
- N+ CERTIFICATION
- MCSE
- CCNA


## கிழமையின் பெயர்கள்...

| | | |
|---|---|---|
| **Sunday** | - | **(Sun)** சூரியனிடமிருந்து வந்தது |
| **Monday** | - | **(Moon)** சந்திரனிடமிருந்து வந்தது |
| **Tuesday** | - | **Tiu** எனப்படும் போர்க்கடவுளின் பெயரிலிருந்து வந்தது |
| **Wednesday** | - | **Woden** என்ற ஆங்கில கடவுளின் பெயரிலிருந்து வந்தது |
| **Thursday** | - | **Thur** எனப்படும் இழ கடவுளின் **Thunder** பெயரிலிருந்து வந்தது. |
| **Friday** | - | **Frig** என்ற தேவதைப் பெயரிலிருந்து வந்தது |
| **Saturday** | - | **Saturn** எனப்படும் ரோமானிய அறுவடை கடவுளின் பெயரிலிருந்து வந்தது. |

**எம்.செந்தில்குமார்**
இளம் ஆங்கிலம் (இடை)





# வாசகர் தூது ...

விக்ரமாதித்தனுக்கு விஷ்ணு ஆயிரம் ஆண்டுகள் பதவியை ஆள வரம் கொடுத்தான். ஆனால் என்னிடம் வரம் கேட்டால் ஏ.வி.சி. கல்லூரியின் இளந்தூது நம் தலைமுறைகள் தழைத்தோங்கும் வரையில் வாழ வரம் கேட்பேன்.

**க.செந்தில்குமார்**
இளம் தாவரஉயிரியல் (இடை)

அறிவை வளர்க்க உதவும் வித விதமான கருத்துக்கள் மனம் மகிழும் வகையில் கவிதைகள், கல்லூரியின் நலன் கருதும் இளன், ஆசி, வாசி, இவற்றையெல்லாம் ஒருங்கே கொடுக்கும் தூதுவே என்றென்றும் நீ வாழ்க! உன் புகழ் வாழ்க!!

**எம்.பூவண்ணன்**
இளம் வரலாறு (இடை)

இதயங்களை இயல்பாய் இன்பமூட்டும் இந்நூற்றாண்டின் இளந்தூதுவே! இன்பமாய், இனிதாய், இன்பமளித்தாய் இளநெஞ்சங்களுக்கு. இன்புதுமலராய் இலட்ச [illegible] இளமாலையாய், [illegible] இதமாய் இன்பச்சோறூட்டி இனிக்கின்றாய் இன்றும்!

**டி.சந்தானலெட்சுமி**
முதுகலை ஆங்கிலம் (நிறை)

என் நினைவுகள் உன்னை நெருங்குகின்றன.
என் இமைகள் இயங்காமல் இருக்கின்றன.
என் கண்கள் உன்னைக் காணத் துடிக்கின்றன.
இளந்தூது உன் புத்தக வெளியீட்டில்
என் படைப்புகளைத் தேடி ...

**[illegible] முரளி**
[illegible]

பேனா [illegible] உயிர்
கொடுத்த என்
கல்லூரி
இளந்தூதுவிற்கு
நன்றி!

**எம். [illegible]**
[illegible]

இளைஞர்கள் மனத்தைக் கொள்ளைக்கொள்ளும் எங்கள் இளந்தூதுவிற்கு என் நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன். கடந்த 2003 - 2006 ஆண்டுகளில் நான் பல கவிதைகளை இளந்தூதுவிற்கு எழுதியனுப்பினேன். ஆனால், அதில் சென்ற இதழில் மட்டுமே ஒரு கவிதை இடம்பெற்றது. அதைப்பார்த்த எனக்கு எல்லையில்லா மகிழ்ச்சி. ஆகவே மீண்டும் என் கவிதைகளை எழுதியுள்ளேன் அதில் இடம்பெறும் என்ற நம்பிக்கையில் எழுதுகின்றேன். எதிர்பார்த்த கவிதைகள் வருவதில்லை. ஏனென்று புரியவில்லை. சென்ற இதழில் என் கவிதையை இடம்பெறச் செய்ததற்குக் கணக்கில்லா என் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**பா.விஜய்**
முதுகலை ஆங்கிலம் (முதல்)

இளந்தூது உன்னைக் காணும் முன் . . .
மரத்தைக் காதலித்தேன் மக்கிப் போனது.
மண்ணைக் காதலித்தேன் மடிந்து போனது.
கடலைக் காதலித்தேன் வற்றிப்போனது.
தீயைக் காதலித்தேன் மழை வந்தது.
உன்னைக் கண்டபின் . . .
பல இளம் கவிஞர்களின் படைப்புகளை
உன் மடியினில் தவழவிடுகின்றாய் என்று . . .

**ப.காளிதாஸ்**
இளம் கணிதம் (இடை)

உன் பெயரே உணர்த்துகிறது. நீ என்றும் இளமையானவள் என்று.

**அ.செல்லத்தம்பி**
இளம் வரலாறு (நிறை)

இளந்தூதுப் பெண்ணே உன்னை வாழ்த்த வார்த்தைகளைத்
தேடுகிறேன். உன் பணியை வர்ணிக்க .

**கோ.பிரபாகரன்**
இளம் வரலாறு (நிறை)

உளியாய் இருந்து பல உருவங்களைத் தந்தாய் நீ
செதுக்கியபோது வலித்தது என்றார்கள்
முழு உருவத்தைப் பார்க்கும் போது
நாமா? என்று வியக்கின்றனர்.
ஆம், இளந்தூது ஆசிரியர் குழுவினர்
இளந்தூதுவே நீ என்றும் வாழ்க. . . !

**ஆ.பிரபு**
இளம் விலங்கியல் (நிறை)

ஆசிரியர் குழு






ஏ.வி.சி.கல்லூரி
கல்வி வானில் தாரகையாய் ஒளிரட்டும்
என்னும் வாழ்த்துடன்...



உணவு விடுதியை ஒரு தவமாகவே எண்ணித் தொழிலில்
நேர்மையையும் உண்மையையும் விருந்தோம்பலில்
கனிவையும் கலந்து, தங்கள் ஒவ்வொருவரையும் எங்களின்
சிறப்பு விருந்தினராக ஏற்று உபசரிப்பதே எங்களின்
குறிக்கோள் ஆகும்.

என்றும் அன்புடன்...

**பெரி.இராசேந்திரன்,**
**கற்பகம் செட்டிநாடு உணவகம்,**
60-61 மகாதானத் தெரு,
மயிலாடுதுறை - 609 001.
தொலைப்பேசி : 224654

# இளந்தூது

அறிந்து பரப்பி ஆக்கம் செய்குவோம்

ஒருங்கிணைப்பாளர் : முனைவர் **துரை. குணசேகரன்** (தமிழ்ப் பேராசிரியர்)

## ஆசிரியர் குழு

| | | |
|---|---|---|
| ஆசிரியர் | : | **கொ.அன்புகுமார்** இளம் விலங்கியல் (நிறை) |
| இணை ஆசிரியர் | : | **அ.நடராஜன்** இளம் வரலாறு (நிறை) |
| துணை ஆசிரியர்கள் | : | **இரா.உஷா** இளம் கணிதம் (நிறை)<br>**செ.பேபிஷாலினி** இளம் கணிதம் (நிறை) |
| வரை கலைஞர் | : | **செ.கோபு** இளம் விலங்கியல் (இடை) |
| சிறப்பு ஆலோசகர்கள் | : | **ந.ராஜா** முதுகலை பொருளியல் (நிறை)<br>**க.குழலினி** முது நுண்ணுயிரியல் (நிறை) |
| உறுப்பினர்கள் | : | **கவி.மோகன்** இளம் தாவரவியல் (இடை)<br>**அ.இன்னாசி பாண்டியன்** இளம் விலங்கியல் (இடை)<br>**ந.சுபத்ரா** இளம் இயல்பியல் (இடை)<br>**ப.மோகனஸ்ரீ** இளம் நுண்ணுயிரியல் (இடை)<br>**கு.புவனேஸ்வரி** இளம் நுண்ணுயிரியல் (இடை) |

உங்கள் படைப்புகள், விமர்சனங்கள் இளந்தூது மின்அஞ்சல் illanthoodhu@rediffmail.com மூலமும் அனுப்பலாம்

படைப்புகளைத் திருத்தவோ, சுருக்கவோ ஆசிரியர் குழுவிற்கு உரிமை உண்டு.

தொடர்புகளுக்கு :
ஆசிரியர்
**இளந்தூது**
மாணவர் இதழ் (மகிழ்ச்சுற்றுக்கு மட்டும்)
அ.வ.அ.கல்லூரி (தன்னாட்சி)
மன்னம்பந்தல் – 609 305
மயிலாடுதுறை.

மேலும் விவரங்களுக்கு . . . www.ilanthoodhu.com மூலம் அனுப்பலாம்.

ஒளியச்சுக்கோர்வை & அச்சிட்டோர்
**அன்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்**
புஷ்பா காம்ப்ளக்ஸ், விஜயா தியேட்டர் ரோடு, மயிலாடுதுறை. ✆ : 228001







# மகாத்மா காலேஜ்

ஆப் பாராமெடிக்கல் சயின்ஸ்

மகாத்மாஜிரி-மிரராணி ஆசிரியர் பயிற்சி கல்லூரி

Run by Sri Ram Educational & Charitable Trust

Govt Reg. No., 156/05

Aproved by IPH & H - New Delhi

நடைபெறும் வகுப்புகள்:

- DMLT ( Dip in medical lab Technology )
- Dip in x- Ray & Ecg Technology.
- Dip in Nursing asst.cum Hospital atan.

(தகுதி : SSLC, +2Pass all groups & any Degree )

**Dip in pre primary Teacher Training.**

( தகுதி : +2 Pass all groups. & any Degree)

- அங்கீகாரம் பெற்ற கல்வி நிறுவனம்
- மருத்துவமனைகளோடு இணை ஆய்வகத்துடன்
- அனுபவம் பெற்ற மருத்துவர்களின் ஆலோசனை
- முன் அனுபவம் பெற்ற ஆசிரியர்களால் பயிற்சி

அனைத்து வசதியுடனும் நமது கல்லூரியில் சிறந்த முறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

தொடர்புக்கு:

முதல்வர்
மகாத்மா காலேஜ்
34, [illegible] ரோடு.
மயிலாடுதுறை - 609 001
கிளைகள்
சிதம்பரம் - [illegible]

☎ 04364-224305

**7TH Channel**

**LASER DIGITAL COLOR LAB**

- 15 நிமிடங்களில் ரோல் டெவலப்பிங், லேசர் பிரிண்டிங், என்லார்ஜிமெண்ட் செய்து தரப்படும்.
- உடனுக்குடன் டிஜிட்டல் முறையில் பாஸ்போர்ட் போட்டோ எடுத்து தரப்படும்.
- 30 நிமிடங்களில் டிஜிட்டல் முறையில் பழைய கருப்பு வெள்ளை படங்களை கலராக மாற்றிதரப்படும்.
- 10 நிமிடங்களில் சிடி, பிளாப்பி, டிஜிட்டல் கேமரா, மெமரி சிப், பென் டிரைவ் ஆகியவற்றிலிருந்து பிரிண்ட் செய்து தரப்படும்.
- 45 நிமிடங்களில் நெகட்டிவிலிருந்து மியூசிக் போட்டோ சிடி ஆல்பம் செய்துதரப்படும்.

30A, Pushpa Complex, Vijaya Theatre Road, Mayiladuthurai.



**CSC®**

**COMPUTER EDUCATION**

An ISO 9001 : 2000 Certified Institution

***Course Offered***

| | |
|---|---|
| MS Office | J2EE |
| C & C++ | Net |
| Visual Basic | XML |
| Foxpro | Autocad |
| SQl Server | Hardware & |
| ASP | Networking |

தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம் மற்றும் டேலி இந்திய நிறுவனம் இணைந்து நடத்தும்

Become a Tally Graduate

ies 8.1


one & only authorised Tally Academy in Mayiladuthurai

No. 122, 1st Floor No. 2 Road,
Near Canara Bank, Mayiladuthurai.
Ph : 220178 Cell : 9443086161

விரிவுபடுத்தப்பட்டு புதிய பொலிவுடன்

# ஸ்ரீ சந்திரன் ஸ்டோர்

எங்களிடம் அன்பளிப்புப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள், பேக் வகைகள், பேன்ஸி பொருட்கள், ஸ்டேஷனரி பொருட்கள், அழகு சாதனப் பொருட்கள் தரமானதாகவும், நியாயமான விலையிலும் கிடைக்கும்.



## ஸ்ரீ சந்திரன் ஸ்டோர்

பட்டமங்கலத்தெரு, மயிலாடுதுறை.

போன் : 222726




ஏ வி சி




THE PROFESSIONAL COURIERS

நம்பிக்கை, நாணயம், துரித சேவையில் 14.9.2006 அன்று 19 வது ஆண்டினை துவங்கும் இந்நாளில் எங்களுக்கு பேராதருவு நல்கிவரும் அத்துனை வாடிக்கையாளர்களுக்கும், நண்பர்களுக்கும், நன்றி. . .

புக்கிங் அலுவலகம்
புஷ்பா காம்ப்ளக்ஸ்,
போன் : 223223

டெலிவரி அலுவலகம்
தீன் பிளாசா,
ஸ்டேட் பாங்க் ரோடு.
போன் : 243323, 243333

14.9.1981 அன்று எங்கள் பயணச் சேவை பயணத்தை தொடங்க இறக்கையை விரித்து பறக்க துவங்கினோம். இன்று மேலே மேலே பறக்க எங்கள் இறக்கையின் கீழ் காற்றாய் இருந்து எங்களை உயர்த்தியதற்கு ஆயிரம் ஆயிரம் நன்றிகள் . . .
என்றும் தங்கள் பேராதரவில் வெள்ளி விழா ஆண்டில்

## ஈகிள் டிராவல்ஸ் கோ

டவுன் எக்ஸ்டன்ஷன், மயிலாடுதுறை.

பாஸ்போர்ட் சர்வீஸ் :
பரிதா காம்ப்ளக்ஸ், கீழ்தளம்.
போன் : 222049, 240915

டிக்கட் அலுவலகம் :
தீன் பிளாசா, தரைதளம்
ஸ்டேட் பாங்க் ரோடு, மயிலாடுதுறை
போன் : 222068, 241059

---

உயர்ந்த ரகம்! குறைந்த விலை!

## R.S. டிரேடர் & R.S.N. பர்னிஷிங்

Ph: 225449

நெ. 23, முதலியார்தெரு.

Branch Office : நெ. 19, M.M.R. அங்காடி, மயிலாடுதுறை.

எங்களிடம் P.V.C. ரெக்ஸின் கிளாத், தர்மாகூல், கார்மேட், தரைவிரிப்புகள், ஸ்கிரின் கிளாத், டூவீலர் ஃபோர் வீலர் வாகன கவர்கள், சோபா - மெத்தைகளுக்கு தேவையான பொருட்கள், மிதியடிகள், மெத்தை விரிப்புகள், H.D.P. தார்பாய்கள், புதிய மாடல் சோபா செட்டுகள் கிடைக்கும்.

தவணை முறை திட்டத்தின் கீழ் சோபாக்கள் கிடைக்கும்.

குறிப்பு : சோபா ரிப்பேர், டூவீலர், ஃபோர் வீலர் வாகன கவர்கள் மற்றும் ஜன்னல் டிசைன், ஸ்கிரீன்கள் உங்களுக்கு பிடித்த டிசைனில் தைத்துத் தரப்படும்.


இ த ழ்